சைவசித்[illegible] நூற்பதிப்புக் கழக வெளியீடு

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை யாதீன வித்துவான்
சபாபதி நாவலரவர்கள்
இயற்றிய

சுருதிசூக்தி மாலை யாகிய

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்

(1982)

திருநெல்வேலி
இந்துகலாசாலைத் தமிழ்ப்போதகாசிரியர்
வி. சிதம்பரராமலிங்க பிள்ளையவர்கள்
எழுதிய
அருஞ்சொற்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை
இரக்தாட்சி௵ ஆவணி௴

Published by
The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,
:: *Tinnevelly and Madras.* ::
1924

பதிப்புரை

சுருதி சூக்தி மாலை யென்னும் நூல் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அரதத்த சிவாசாரியரால் வடமொழியிலே அருளிச் செய்யப்பட்டது. அது நான்கு வேதங்களானும் முழுமுதற் கடவுளென அறுதியிடப்பட்டவர் சிவபெருமானே யென்பதைத் தொடை விடைகளாற் பல்லாற்றானும் விளக்குவது. அந்நூல் சதுர்வேத தாற்பரிய சங்கிரக மெனவும் பெயர் பெறும். அதற்கு அக்காலத்துச் சோழவரசராகிய சிவலிங்க பூபதியென்பவர் உரை யியற்றினர்.

அந்நூல் சைவசித்தாந்த சந்தானசாரியர் நால்வருள் ஒருவராகிய கொற்றங்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகளாலே தாமருளிய பௌஷ்கர வியாக்கியானத்திற் பிரமாணமாக எடுத்தாளப்பட்ட தென்ப. ஸ்ரீ பாஷ்யகாரராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் தாமருளிச் செய்த சிவஞான பாடியம், சிவஞான சித்தியாருரை, சிவசமவாதவுரை மறுப்பு என்னும் நூல்களில் அந்நூலைப் பெரிதும் போற்றியருளினார்கள். சதுரதிக சதப்பிரபந்த கர்த்தாவும் நீலகண்டமதப் பிரதிஷ்டா குருவுமாகிய அப்பதீக்கிதர் சிவபரத்துவம் விளக்கியியற்றிய சிவதத்துவ விவேகம், சிவகர்ணாமிர்தம் என்னும் நூல்களில் அந்நூலையும் அத

ஞசிரியரையும் மிருந்த நன்கு மதிப்புடன் உதாஈரித்திருக்கின்றனர்.

அரதத்த சிவாசாரியர் சரித்திரம் பரமேதிகாச மாகிய சிவரகசியத்திலே ஒன்பதாவது அமிசத்திலே எரு சுலோகங்களாலும், பவிடியோத்தர புராணத்திலே சிவபக்த மான்மியத்திலே ௫௪ முதல் ௬௫ வரையுள்ள பன்னிரண்டு அத்தியாயங்களில் எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து சுலோகங்களாலுங் கூறப்பட்டிருக்கின்றது. அச் சரித்திரம், அரதத்தாசாரியர் அந்நூலைச் சிவபிரானது மகிமையைக் கூறிய தம்மோடு வாதஞ்செய்த தம் பிதாவாகிய வாசுதேவர் முதலிய வைணவர்கள் தேறுமாறு அவர்கள் கூறிய வண்ணம் கஞ்சனூர் வரதராஜ சுவாமிசந்நிதியில் பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலியிலிருந்து அருளிச்செய்து யாதோரிடையூறு மின்றி விளங்கிச் சிவபரத்துவஞ் சாதித்தனரென்று கூறுகின்றது. அந்நூலின் இரண்டாவது சுலோகம் 'வேதேஷுவா ததநுயாயிஷுவா விசார்ய தந்த்ரேஷு வாக்ய மகிலம் பிரதிபாதகந்தே। தாத்பர்ய ஸங்க்ரஹமஹம் விததேமஹே சமஹ்யம் ப்ரஸீத நயமாம் ருஜுநாபதாத்வம் ॥ என வருவதும், இறுதிச் சுலோகத்தில் 'அபராகம் அவைதிகேஷு' என வருவதும் அந்நூல் வாதசம்பந்தமாகச் செய்யப்பட்டதென்பதை வலியுறுத்துகின்றன. மற்று அந்நூலின் பெருமையும் உரையின் பெருமையும் ஆசாரியரின் சரித்திரமும் காலமும்

முதனூலின் முன்னுரையில் விரிவாக எழுதப்பட்டிருத்தல்கொண் டறியலாகும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த அந்நூல் வடமொழியிலிருத்தலின் அஃது அம்மொழி வல்லார்க்கே பயன் படுவதாகின்றது. வடமொழிக் கல்வி அருகிவருங் காலநிலையைக் கருதி அந்நூலைப் பல்லோர் தமிழில் மொழி பெயர்த்தார்கள். அவற்றுளெல்லாஞ் சிறந்தும் முதனூற் பொருளைத் தெளிவுபெற விளக்கித் தமிழ்ச்சுவை ததும்பி நிற்பதும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவானுயிருந்த யாழ்ப்பாணத்து வடகோவைச் சபாபதி நாவலரவர்கள் செய்த மொழி பெயர்ப்பே.

நாவலரவர்கள் தமது மொழி பெயர்ப்பின் முதற் பதிப்பைத் தாதுஸு சித்திரைமீ (1876) த்திலும், இரண்டாம் பதிப்பைச் சர்வசித்துஸு மாசிமீ (1887) த்திலும் வெளியிட்டார்கள். இப்பொழுது அம்மொழி பெயர்ப்புச் சுவடிகள் கிடைத்த லரிதாதல்பற்றி யாங்கள் அதனை வெளியிடுகின்றோம். சமயநூற் கல்வி குறைந்துவரும் இக்காலத்தில் அம்மொழி பெயர்ப்பில் வரும் அரும்பொருட் கெல்லாம் விளக்கமெழுதிப் பதிப்பித்தல் நலமென்பது எங்கள் கருத்து. அக் கருத்துக் கிணங்கித் திருநெல்வேலி இந்து சலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் திருவாளர் வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள் எழுதிய அரும்பொருள் விளக்கம் எங்களது இப்புதிய பதிப்பில் சேர்க்கப்பட் டிருக்

கின்றது. அவர்கட்கு யாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

சைவநலங் கருதியும் தமிழ்நலங் கருதியும் பல அரிய நூல்களை வெளியிடல்வேண்டுமென்பது எங்கள் விருப்பம். எங்கள் விருப்ப மனைத்தும் இனிது முடியும் வண்ணம் முன்னின்றருளுமாறு எல்லாம் வல்ல சிவபெருமானது திருவடிகளை வழுத்துகின்றோம்.

திருநெல்வேலி.
உக. க. ௲௯௱௨.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்தார்.

உ

திருச்சிற்றம்பலம்

சுருதி சூக்தி மாலையாகிய சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்

தற்சிறப்புப்பாயிரம்

மதியணி சடைமுடி வானவ னளித்த
கதிதரு களிற்றின் கண்ணரு ளுறீஇச்
சற்குரு நாதன் பொற்கழல் வணங்கி
வரம்பெறு கலையெலா மொருங்குமுழு துணர்ந்த
விரதத் தாரடி புனைந்த மேலோ
னரதத் தாசா ரியசூ ளாமணி

வானவன்-தேவன்: இங்கே சிவபெருமான்.

கதி-மோக்ஷம்.

சற்குருநாதனென்றது திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பதினாறுவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ: சுப்பிரமணியதேசிக சுவாமிகளை.

விரதத்தார் அடிபுனைந்த மேலோன்-விரதத்தார் தனது திருவடியைப் புனைந்துகோடற் கேதுவாகிய மேம்பாட்டினையுடையோன்: 'தவரடிபுனைந்த தலைமையோன்' என்றாற்போல இவ்வாறு பொருள் கோடலைப் 'பொருள் எதுவாகச் சொற்பொருளியம்புத' லென்பர் இலக்கணக் கொத்து நூலார்.

சிவனே பரனெனத் தேறிய யாவரும்
வட்மொழி யத்னிற் றிடமுற வருளிய
முதிர்போதங் காட்டு முதனூ லான
சதுர்வேத தாற்பரிய சங்கிர கத்தினை
யம்முறை மொழிபெயர்த் தரும்பொரு டோன்றச்
செம்மைசேர் கடாவிடை சேர்கத் தியமாத்
திருந்த நுனித்தெணிச் செய்குவ
னருந்தமிழ் நாவலோ ரறிதரற் பொருட்டே.

தேறிய-தேற. யாவருந்தேறிய வென்க.

முதிர் போதம்-முற்றிய ஞான நூல்களின் பொரு ளொருமை.

சதுர்வ்வத தாற்பரிய சங்கிரகம் சுருதிசூக்தி மாலை யெனவும் வழங்கப்படும்: இதனைப் 'பஞ்சாச துத்தர சதா ச்ருதி ஸூக்திமாலா' என வரும் முதனூலிறுதிச் சுலோகத்தா லறிக.

கடா-வினா. சூத்தியம்-உரைச் செய்யுள்.

திருந்த நுனித்தெணி-திருத்தமுறக் கூர்ந்து ஆராய்ந்து.

சிவவணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

எவன்வணக்கத் தினுக்குரிய க
 னெவன்குணங்க ளானிறைந்தோ
னெவன்வழிபா டியம்புநா
 ராயணமென் னுபநிடத
மெவனமுயிர்ப் பிரேரகன்மற்
 றெவன்வேள்விக் கெலாமிறைவ
னவனரு மீசவனைக்
 கதியிலியான் சரணடைந்தேன்.

வேதத்து மற்றதனுக் கவிரோத உ
 தந்திரத்தும் விமல வுன்னைப்
போதிக்கும் வாக்கியங்க ளெவற்றினையு
 மறிந்தவற்றூற் போந்த மூட

க. குணங்கள்-அளவிலாற்றலுடைமை முதலிய கல்யாண குணங்கள்: மாயாகுணங்களல்ல.

நாராயணம் என் உபநிடதம்-நாராயணோப நிடதம் இவ்வுபநிடதம் மகோபநிடத மென்றுங் கூறப்படும். (ருடு-வது சுலோகம் பார்க்க)

உயர்ப் பிரேரகன்-அறிவைச் செலுத்துபவன்: அஃதாவது காயத்திரி மந்திரத்தாற் பிரதிபாதிக்கப்படுபவன்.

உ. அவிரோத தந்திரம்-காமிக முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்கள். விரோத தந்திரம் - பாஞ்சராத்திரம், வாமம், இலாகுள முதலியன. போந்த தாற்பரிய மென்க.

வாதத்துக் கிடமாகாத் தாற்பரியத்
திணைச்சுருக்கி வகுப்பா னுற்ற
பேதைக்குட் பேதையா மெனக்கருளி
மெய்ந்நெறியிற் பிரேரி யெந்தாய்.

நூல்

௲ வேதமாவது மந்திரம் அருத்தவாதம் விதிவாக்
யமென மூவகைப்பட்டுப், பிறவாக்கியங்களைப்
பற்றுது தானே பிரமாணமாகி, விமற்சரர்க்
கன்றிப் பிறர்க்கறியப்படாத மெய்ப் பொருளினை
ச யுடைத்தாய் ஈசுரனையே அறிவிப்பதாம். இனி
ஈசுர சத்தம் யோகத்தாற் பிறகடவுளரையு
முணர்த்துமேனும், யோகரூடியினுற் சிவபிரா
னையேயுணர்த்தலின், அஃதவர்க்கே யுரியபெய
ராம். யோகத்தினும் ரூடி வலியுடைத்தென்பது
ரு மீமாஞ்சை வழக்கென வறிக. இதுபற்றியன்றே
நிகண்டு நூலுடையார் சிவாதி நாமங்கள்போல
இதனைச் சிவநாமமாகக் கொண்டோதுவாராயிற்

௲ - சு. மந்திரம் - இந்திராய சுவாகா, வருணய சுவாகா என்
ருற்போல்வன. அருத்தவாதம்-புனைந்துரை. விதிவாக்கியம்
நீராடுக, வழிபடுக என்ருற்போலுஞ் சோதகவாக்கியங்கள்.

மற்சரர்-பிறாக்கத்திற் பொருமையுடையோர்: விமற்ச
ரர்-அஃதில்லாதவர்.

சத்தம் - சொல். யோகம் - காரணப்பெயர். யோகரூடி -
காரணவிடுகுறிப்பெயர். ரூடி-இடுகுறிப்பெயர்.

றென்க. அற்றேல், மகேச்சுரன் பரமேசுரனென வொரோவழிப் பிறிதினியைபு நீக்கி விசேடிப் பதெற்றிற் கெனின், மகத் பரம வென்னும் விசேடணங்கள் செஞ்ஞாயிறென்றாற் போலச் சிவபிரானது இயற்கையாகிய வுயர்பினையே குறித்து, இயைபின்மை நீக்குதன்மாத்திரை யின் விசேடிக்க வந்தனவன்றிப் பிறிதினியைபு நீக்கி விசேடிக்க வந்தனவன்றென்க. அற்றேல், அங்ஙனம் விசேடித்துப் பயப்பதின்றெனின்,
அற்றன்று. பொருளின்கண் உயர்பு இயற்கை ௬
யாக வுள்ளதேனும், விசேடண பதத்தான் விளங்கு மென்பது சத்தநூலார் மதமாகலின், மகத் பரம வென்பன வற்றால் ஈசுரசத்தத் தினது இயற்கையான உயர்பு விளங்கலின் பயனுண் டென்க.

யோகத்தினும் ரூடி வலியுடைத்தென்பது 'ரூடிர் யோகமபஹரதி' என்பதனானறிக.

நிகண்டுநூல்-அமர கோசம்.

செந்தாமரை யென்பதிலுள்ள செம்மை வெண்டாமரையை நீக்கித் தாமரையை விசேடிப்பதால் அது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்: செஞ்ஞாயிறு என்பதிலுள்ள செம்மை அவ்வாறு நீக்காது ஞாயிற்றை விசேடிப்பதால் அஃது இயைபின்மை மாத்திரை நீக்கிய விசேடணம்.

சத்தநூல் - இலக்கணநூல்: இங்கே குறிக்கப்பட்டது பாணினீயம் ௨. ௧. ௬௧-வது சூத்திரம். அச்சூத்திரமாவது 'ஸந்மஹத்பரமோத்க்ருஷ்டா: பூஜ்யமாநை: 'என்பது.

எ இனிக் காணப்படு மிந்தப் பிரபஞ்ச மோர் ரீசுரனை யன்றி நிலையுத லுடைத்தன்று. அவ்வீ சுரனும் ஏகனாதலன்றி அனேகனாதலும் பொருத் தமின்று. ஈசுர சத்தவாச்சியத்துவஞ் சிவபிராற் கன்றி ஏனைத் தேவர்க்கின்மையின், லோக வேதாதி கரண நியாயத்தினானே பிரபஞ்சம் அவரானேநிலையுதலுடைத்தென்றலே பொருத்த
அ முடைத்தென்க. சாங்கியரி லொருசாராரும் அவரை யனுவதிக்கும் பிறரும் பிரபஞ்சம் ஈசுரனை யுடைத்தன்றென்றும், யோகநூலாரும் அவரையநுவதிக்கும் பிறரும் அஃதீசுரனை யுடைத்தென்றுங் கூறுப. இஃதென்சொல்லிய வாறோவெனின், பன்மதத்தரு முதல்வன் உண் மை யின்மைகளை ஈசுர சத்தங்கொண்டே விவ கரிப்பவென அதன் வழக்கு மிகுதி உலகின்கட் காட்டி ஏதுவை விளக்கு முகத்தான், உலகிற்கு முதலாந் தன்மை சிவபிராற்கே பொருந்து மென்ற மேற்கோளை வலியுறுத்தவாறென்க.

எ, அ. லோகவேதாதி கரண நியாயம்-இங்கே லோக மென்பது புராணம்: புராணங்களிலும் வேதத்திலும் உலகந் தொழிற் படுகிற தென்றும் அவ்வாறு தொழிற்படுதல் ஈசுர னாலே யென்றுஞ் சொல்லப்படும் நியாயம்.

சாங்கியம் சேசுரசாங்கியம் நிரீசுரசாங்கிய மெனஇரு வகைப்படும்: சேசுரசாங்கியம் ஆஸ்திகம், நிரீசுரசாங்கியம் நாஸ்திகம்: இங்கே குறிக்கப்பட்ட ஒருசாரார் நிரீசுர சாங்கி யஞ் செய்த கபிலர்.

யோகநூலார்-இரணியகருப்பர்.

இவ்வாற்ருற்றலைமையான அபரிச்சின் னைசு கூ
வரிய முண்மை சிவபிரானுக்கே சித்தித்தலின்,
வணங்கப்படுந் தன்மை அவருக்கே யுரித்தா
மென்க. இதுபற்றியன்றே வேதங்கள் சிவபிரா
னுக்கே பெரும்பான்மையாக வணக்க வாக்கியங்
கள் கூறியதூஉ மென்க. அது சிவபிரானைக் ௰
குறித்துப் பசுநியோசனங் கூறிய "யாவனுக்கு க௩
வணக்கம் உரித்தாமோ அவன்பொருட்டு உன்னை
நியோசிப்பேன்" என்னுஞ் சுருதியானும், சிவ
பிரானைத் திப்பியமாகிய சிஞ்சுமாரத்தின் சிர
சென்று கூறிய "எதுவணங்கற்பாற்று அதுசிர
சாம்" என்னுஞ் சுருதியானு மறிக. அஃதேல்,
சிவபிரானை யொழித்தொழிந்த ஏனைத் தேவருக்
கும் வேதத்தில் ஆண்டாண்டு வணக்கங் கூறிய
தென்னையெனின், ஆற்றுநீர் கடலையடையுமாறு
போல ஏனைத்தேவர்மாட்டுக் கூறப்பட்ட வணக்
கங்கள சிவபிரானையே சென்றடைதலின், அங்

கூ-கள. அபரிச்சின் னைசுவரியம் -அளவிடப்படாத ஐசு வரியம்.

பசுநியோசனங் கூறிய சுருதியாவது 'யஸ்மை நமஸ் தஸ்மை த்வாஜுஷ்டம் நியுநஜ்மி' என்பது.

சிஞ்சுமாரத்தின் சிரசென்று கூறிய சுருதியாவது 'யஸ்மைநமஸ் தச்சிர:' என்பது.

சூலகவமென்னுங் கிரியாவிதி 'அத சூலகவ: ஸம்வத் ஸரே ஸம்வத்ஸரே மார்க்க சீர்ஷ்யாம் பௌர்ண மாஸ்யாம் க்ரியேத' என்பது முதல் 'சூலகவோ வ்யாக்யாத ஏவமேவா

கஉ னனங் கூறபட்டதென்க. இவ்விரண்டு சுருதியா
னுஞ் சிவபிரானே வணக்கத்துக்குரியனென்பது
மந்தபுத்தி யுடையார்க்கும் இனிது விளங்கும்.
கங அற்றேல், ஆண்டுப் பசுநியோசனஞ் சிவபிராற்
குரியதென எடுத்தோதாமையானும், "எது
வணங்கற்பாற்று அது சிரசாம்" எனப்பொது
வாற்றாற் கூறியொழிதலானும், இவ்விரண்டு
சுருதிகளானுங் கூறப்பட்டவணக்கங்கள் சிவ
பிரானுடையனவென்றல் அமையாதாம் பிற
கச வெனின், அற்றன்று. ஆண்டுக் கூறப்பட்ட
சூலகவம் என்னுங் கிரியை சிவபிரானுக்கே
உரியதென மந்திரங்களெல்லா முறையிடு
தலானும், ஏனைத்தேவரெல்லாஞ் சிஞ்சுமாரத்
தின் அவயவங்களாகக் கற்பித் தொழிக்கப்
பட்டமையின் எஞ்சி நின்ற சிவபிரானே ஆண்
டுச் சிரசாக வேண்டப்படுவனென்பது பாரி
சேட அளவைபற்றித் துணியப் படுதலானும்
கரு அஃதமைவுடைத் தென்க. இதுபற்றி யன்றே

ஷ்டம்யாம் ப்ரதோஷே க்ரியேதை தாவதேவநாநா. நாத்ரோ பாகரணம் பசோ:' என்பது வரை போதாயன கிருகிய சூத்திரத்தில் இரண்டாவது பிரசினத்தின் எழாவது அத்தியாயத்தில் (கங. கச.) கூறப்பட்டமை காண்க.

ஏனைத் தேவரெல்லாம் சிஞ்சுமாரத்தின் அவயவங்களாகக் கற்பிக்கப்பட்டமை 'தர்மோ மூர்த்தா நம்ப்ரஹ்மோத் தராஹநுர் யஜ்ஞோ அதராவிஷ்ணுர் ஹ்ருதயம் ஸம்வத்ஸர: ப்ரஜநநம்' என்று தொடங்கி வரும் மந்திரத்தாலறியப் படும்.

பரதநூலார் இந்திரன், பிரமன், விண்டு வென்னுந் தேவருக்கு முறையே வச்சிரம், கமலம், சங்க மென்னு முத்திரைகளானும், சிவபிரானுக்குச் சிரசில் அஞ்சலி முத்திரையானும், அவிநயங் கூறியதூஉமென்க. இனிப் பிரமன் முதலிய கசு
தேவர் தம்மைக்குறித்துச் செய்யப்படும் வணக்கங்களைத் தமக்கென ஏன்று கொள்ளக் கருதார்; என்னை? சோரனால் வெளவிக் கொணரப்படினும் முடியணி அரசர்க்கே யுரியதாகலின், அதனை எவனும் ஏன்றுகொள்ளக் கருதான்; கருதுமாயின் அப்பெற்றியான் அரசனு லொறுக்கப்படுத லொருதலையாதல்போல அவருஞ் சிவபிரானுலொறுக்கப்படுத லொருதலை யாகலின். அற்றேல், அவர் கஎ

பரதநூலிற் கூறப்பட்ட அபிநயவாக்கியமாவது 'வஜ்ரிண்யாமுத்ரயா சக்ரம் பத்மிந்யா தர்சயேத்விதிம் | சங்கிந்யா கேசவம் ருத்ரம் சிரஸ்யஞ்ஜலி முத்ரயா||' என்பது.

பிரமன் முதலிய தேவர்களைக்குறித்த வணக்க வாக்கியங்கள் 'நமோ ப்ரஹ்மணே நமோ அஸ்த்வக்நயே நம: ப்ருதிவ்யை நம ஓஷதீப்ய: நமோ வாசே நமோ வாசஸ்பதயே நமோ விஷ்ணவே ப்ரஹதே கரோமி' என்பது முதலியன.

இவையனைத்தும் சிவபிரானையே யடையு மென்பது 'ஸ்தோமம் வோ அத்ய ருத்ராய' என்று தொடங்கும் (ருக் வே, ம. கூரு. க.) மந்திரத்தாலறியப்படும். 'ஆகாசாத்பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் | ஸர்வ தேவநமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி||' என்பது சாமான்ய மிருதிவசனமே யாதலானும் அவ்வசனம் பிரத்தியக்ஷ வேதத்தான் மறுக்கப்படலானும் விப்பிரலம்ப வாக்கியம் போல அப்பிரமாணமாம்.

என்றுகொள்ளுமாறு தானென்னையெனின், அவ்வணக்கத்தைச் சிவார்ப்பணஞ் செய்தலை என்று கொள்ளுமா றென்க.

கஅ அற்றேல், சிவபிரானுக்கே நேராகவணக்கங்
கூறலமையும், அவர்மாட்டுக்கூறல் வேண்டாவெ
னின், அஃதொக்குமன்றாயினும், உடம்பை உயிர்
அதிட்டித்து நிற்றல்போல எல்லாப்பொருளையுஞ்
சிவபிரான் அதிட்டித்துநிற்றலின், அவ்வியைபு
பற்றி, அதிட்டிக்கப்படும் பொருள்கண்மாட்டும்
அவர் வணக்கங்கூறப்பட்ட தென்பது. இக்கருத்
துப்பற்றி யன்றே திருவுருத்திரத்திற் செடிகளுக்
கும், ஞமலிகளுக்கும் ஞமலிகளின் பதிகளுக்
கும் வணக்கங்கூறியதூஉம், உலகத்திற் சிவபத்
திக்கிழமைபற்றி நரராகியசிவனடியர் வணங்கப்
ககூ படுவதூஉமென்க. இவ்வாற்றாற் சிவபிரானைக்

இதன் விரிவை முதனூலிற் பதினாறாவது சுலோக வியாக்கியானத்திற் காண்க.

கஅ-உக. சிவபெருமான் எல்லாப் பொருளையும் அதிட்டித்து நிற்றலை 'யோ யோநிம் யோநிமதிதிஷ்டத் யேகோ யேநேதம் பூர்ணம் பஞ்சவிதஞ்ச ஸர்வம்' என்னும் **சுவேதா சுவதா** சுருதியாலும் 'சிவேநாதிஷ்டிதம் ஸர்வம் ஜகதேதச் சராசரம்' என்று தொடங்கிவரும் **அதர்வசிரச்** சுருதியாலும் அறியப்படும். திருவுருத்திரத்திற் கூறப்பட்ட இவ்விஷயம் **ஸ்ரீ சிவஞானபாடியத்தில்** கஉ-வது சூத்திரத்து மூன்றாவ ததிகரண வுரையிற் கூறப்படுதல் காண்க. 'ச்வப்ய: ச்வபதிப்யச் சவோநம:' என்பது **திருவுருத்திரம்.**

குறித்துச்செய்யப்படும் வணக்கம் ஈசுரத்தன்மை குறிப்பதூஉம் அதனியைபு குறிப்பதூஉமென விருவகைத்தென்பதூஉம், அவற்றுள், முன்னை யது நேராகவும் பின்னையது அதிட்டிக்கப்படும் பொருள்வாயிலாகவுஞ் சிவபிரானை யடைபவென் பதூஉம் போந்தவா றுணர்க. இனிப் பின்னைய உ0
தைச் சிரேட்டம்பற்றிய தென்பாருமுளர். சிரே ட்டமில்லாதனவற்றின்கண் அதிவியாத்திவருத லின், அஃததற்கிலக்கணமாதல் யாங்ஙனமென மறுக்க. அல்லதூஉம் பசுக்களாகிய தேவருக் உக
குப் பதியாந்தன்மைபற்றிச் சிவபிரானுக்குச் சிரேட்டப்பெயர் வழக்குச் சாமவேதத்திற் கிருச் சிரமந்திரத்துட் பொதுவாகவும் வேதத்துள்யாண் டுஞ் சிறப்பாகவுங் கூறப்படுதலின், அதுவும் அவர்க்கேயன்றி ஏனைத்தேவர்க்குச் செல்லாமை யறிக.

சிவபிரானை ஏனைத் தேவரோ டொப்ப வைத்து உஉ
வணங்கலும், வாழ்த்தலும், வேள்விக்கண் விளி

சாமவேதத்தில் சிவபெருமானுக்குச் சிரேட்டப்பெயர் கூறப்படுவதை 'நமோஜ்யேஷ்டாய ச்ரேஷ்டாய' என்னுங் கிருச்சிராதிகரணத்தில் படிக்கப்படுதலான் அறிக.

உஉ-உச. சிவபிரானைப் பொதுநீக்கி வழிபடல் வேண்டு மென்பதை 'மாத்வா ருத்ர சுக்ருதமா நமோபிர்மா துஷ்டு திவ்ருஷபமா ஸஹூதீ உந்நோவீரா அர்பய பேஷஜேபிர் பிஷக்தமம்த்வா பிஷஜாம் ச்ருணோமி' (ருக்வே உ. நந. ச.) என்னும் மந்திரத்தானும்'பொது நீக்கித்தனை நினைய வல்லார்க்

த்தலு நன்றாகாவென்க. புத்திரகாமேட்டிக் கண் அவிசமுப்பிற் சோமதேவதையோடு உருத் திரன் ஒருங்கு விளிக்கப்பட்டமை வேதத்திற் கேட்கப்படுதலின் அது பொருந்தாதெனின்; அறியாது கடாயினாய். ஆண்டுச் சோமதேவதை யோடு விளிக்கப்பட்ட உருத்திரன் சிவபிரானல்
உ௩ லர்; அக்கினியே. அது, ஆண்டைப் பிராதரக்கி ணிம் என்னுஞ் சூத்தத்திற்றானே சிவபிரானுக்கு விளி வேறாகக் காணப்படுதலினான், இனிது
உ௪ விளங்குதலி னென்க. அச் சூத்தத்திற் சிவபிரா னுக்கு விளி வேறாகக் காணப்படுதல் எற்றாற் பெறுது மெனின், அம்மந்திர சம்பந்தத் தகுதி யுடைத்தாய் நிகழ்த்தாநின்ற கிரியாபதத்தை யொழித்துச் சிவபிரானது விளிக்கண் வேறு கிரியாபதம் பிரயோகித்தமையாற் பெறுதுமென் பது. இவ்வாசங்கை யொழித்தற்கன்றே வனைத் தேவரை விளித்த மந்திரங்கட்குஞ் சிவபிரானை விளித்த மந்திரங்கட்கும் இடையே “உத” என்னும் பதந்தலைப்பெய்ததூஉ மென வுணர்க.

கென்றும், பெருந்துணையை' (திருநாவு. கோயிற்றிருத் தாண்டகம்) என்னும் திருவாக்கானும் அறியப்படும்.

பிராதரக்கினிம் என்னும் சூக்தமாவது:— ‘ப்ராதரக்நிம் ப்ராதரிந்த்ரம் ஹவாமஹே ப்ராதர் மித்ரா வருணா ப்ராதரச்வி நா ப்ராதர்பக பூஷணம் ப்ரஹ்மணஸ்பதிம் ப்ராதஸ்ஸோம முத ருத்ரம் ஹுவேம' என்னும் மந்திரம்.

அற்றேலஃதங்ஙனமாக; ஆண்டு உருத்திர உரு
பதம் அக்கினியை உணர்த்தற்குப் பிரமாண
மென்னை யெனின், கூறுதும். முன்னோர் காலத்
திற் றேவர்கட்கும் அசுரர்கட்கும் பூசனிகழ்ந்
தது. அப்போழ்து தேவர் தந் தனத்தைப்
பாதுகாக்க அக்கினிமாட்டு வைத்தனர். வைக்கப்
பட்ட தனத்தைஅக்கினி அபகரித்துக்கொண்ட
னன். அதுபற்றியவர் அவனை வலிசெய்யலுற்
றிறு அவன் ரோதனஞ்செய்தனன். அதனான்
அக்கினிக்கு உருத்திரப் பெயர்வழக்கு உண்
டாயிற்றென் றறிக. அஃதேல், மருத்துக்களுக்
குஞ் சிவகணங்கட்கும் உருத்திரப் பெயர் வழங்
குமா றென்னையெனின், உருத்திரனினின்றுந்

உ௰ரு-உ௰அ. அக்கினிக்கு உருத்திரப்பெயர் வந்ததை
'தேவாஸுராஸ் ஸம்யத்தா ஆஸந்தே தேவா விஜய முபயந்
தோ அக்னௌ வாமம்வஸு ஸந்ந்யததே இதமுநோ பவிஷ்
யதி யதி நோ ஜேஷ்யந்தீதி ததக்நிர்ந்ய காமயத தேநாபாக்ரா
மத்தத்தேவா விஜித்யா வருருத்ஸமாநா அந்வாயந் ததஸ்ய ஸ
ஹஸாதித்ஸந்த ஸோரோதீத்யதரோ தீத்தத்ருத்ரஸ்ய ருத்ரத்
வம்' என்பதனானறிக. இது கந்தபுராணத்துத் தக்ஷகாண்டத்
தில் ததீசியுத்தரப் படலத்திலும் விவரிக்கப்பட்டிருத்தல்
காண்க.

மருத்துக்களுக்கு உருத்திரப்பெயர் வரக்காரணமும் அப்
பெயர் வழக்குண்மையும் 'ஆதேபிதர் மருதாம் ஸும்நமேது
(ருக்வே உ. ௩௩. க.) என்னும் மந்திரத்தானும் 'ஆருத்ராஸ
இந்த்ரவந்த:' (ருக்வே. ரு. ருஎ. க்.) என்னும் மந்திரத்தானும்
அறியப்படும்.

தோன்றினமையின் அவர்க்கும் அப்பெயர்
வழக்கு உண்டாயிற்றென்க. சிவபிரானுக்கோ
வெனின், உயிர்களுக்கு ஸம்ஸாரரோகத்தை
உசு யொழித்தற்காரணத்தால் அப்பெயருடைமை
யாயிற் றென்க. யசுர்வேதத்தில் ஆருணமென்
னுஞ் சாகையில் யாகத்திற்கும் உருத்திரப்பெயர்
கேட்கப்படுமெனின், ஒரு பொருட் பெயர் அத
னோடியைபுடைப் பிறிதுபொருட்கும் ஆகுநெறி
யுண்மையின், உருத்திரனோ டியைபுடைத்தாய
உஎ யாகத்திற்கு அஃது ஆகுபெயராயிற் றென்க.
தாபத்தை உயிர்க்கு விளைத்து அவை இரங்கச்
செய்தலின், சுரத்திற்கும் அப்பெயர்வழக்கு

சிவகணங்கட்கு உருத்திரப் பெயருண்மை 'ஸஹஸ்ராணி ஸஹஸ்ரசோ யே ருத்ரா அதிபூம்யாம்' என்னு மந்திரத்தாலும், சிவபெருமான்பால் தோற்றரவுண்மை 'ப்ரஜாஸ்ஸ்ருஜேதி நிர்திஷ்டச் சந்த்ரமௌளிர் விரிஞ்சினா | ஸஸர்ஜ மநஸா ருத்ராநாத்ம துல்யாந் மஹேச்வர: | நீலகண்டாம்ஸ்த்ரிணேத்ராம்ச்ச ஜடாமகுட மண்டிதாந் | 'என்னும் **ஆதித்தியபுராணவசனத்தாலும்** அறியப்படும்.

சிவபெருமானுக்கு உருத்திரப்பெயர் உயிர்களின் சம்ஸாரரோகத்தை யொழித்தலால் வந்ததென்பதனை 'ருத்துக்கம் துக்கஹேதுர்வா தத்ராவயதி ய: ப்ரபு: | ருத்ர இத்யுச்யதே தஸ்மாச் சிவ: பரமகாரணம் | 'என்னும் **புராணவச**னத்தா னறிக.

ஆருணகேதுக மென்னுஞ் சாகையில் யாகத்திற்கு உருத்திரப் பெயர் வழக்குண்மை 'ஏதத்ருத்ரஸ்ய தநு:' என்று தொடங்கும் மந்திரத்தாலறிக.

உண்டு. ரௌத்திரமோவெனின், அஃதும் அத
னைப் பகுதியாகவுடைய தத்திதமென்க. அல் ௨௮
லதூஉம், வாயசம், பாகவதன், சாத்துவதனென்
றற்றொடக்கத்தனபோற் றத்திதபதப் பிரதிரூப
மெனினுமமையும்.

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், ௨௯
வைராக்கிய மென்னுமாறும் பகமெனப்படு
தலின், இவை சிவபிரானுக்கே யுண்மையின்,
அவரே பகவனெனப்படுவர். அற்றேல், இவை ௩௦
யாறுஞ் சிவபிரானுக்கு உள்ளனவென்பதற்குப்
பிரமாண மென்னையெனின்;—அவர்க்கு ஐசுவரிய
முண்மைக்கு ஈசுரபதச் சுருதியும், வீரியமுண்
மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்
குச் சிவபதச் சுருதியும், திருவுண்மைக்கு இரு
க்குவேதமும், ஞானமுண்மைக்குச் சருவஞ்ஞ
சுருதியும் வைராக்கிய முண்மைக்குக் காமரிபு
பதச் சுருதியும் பிரமாணமாமென்க. "திருவி ௩௧
னுற் சிரேட்டர்" என்றும், "திருவை யெய்தும்
பொருட்டுச் சிவபிரானது விசித்திர ரூபமாகிய

சுரத்திற்கு உருத்திரப் பெயருண்மை 'ருத்ர: கலு வை வாஸ்தோஷ்பதி:' எனவரும் மந்திரத்தாலறியப்படும்.

௩௧. 'திருவினுற் சிரேட்டர்' எனவரும் மந்திரமாவது 'ச்ரேஷ்டோ ஜாதஸ்ய ருத்ர ச்ரியாஸி தவஸ்தமஸ்தவஸாம் வஜ்ரபாஹோ' (ருக்வே. ௨. ௩௩. ௩) என்பது.

திருவை யெய்தும் பொருட்டுச் சிவபிரானது விசித்திர

லிங்கந் தேவராற் பூசிக்கப்பட்டது" என்றும்
இருக்குவேதங் கூறலின், ஈண்டுத் திருவெனப்
௩௨ பட்டது பொருட்டிரு வன்றென்க. வாய்மை,
பொறை, தைரியம், அதிட்டித்தல், ஆன்ம
போதம், சிருட்டித்தல், ஆசையின்மை, தவம்,
புத்தி, ஈசுரத்துவ மென்னுந் தச குணங்
களும் தருமமுஞ் சிவபிரானுக்கே யியை
௩௩ வன. இனி ஐசுவரியமுடையார், பெரும்புக
ழுடையார், வீரர், செல்வர், அரசர், சக்கிர
வர்த்திகளென்னு மிவரையும் இன்னோரன்ன
வியல்புடைய பிறரையும் பகவப்பெயரான் வழங்
கார். மெய்யுணர்ந்து அவாவறுத்தார்கட் சிவம்
பிரகாசித்தலுண்மையின், அவரைப் பகவப்
பெயரான் வழங்குப.

௩௪ அற்றேலஃதாக; பகவப் பெயர் சிவபிரானுக்
குரியதென்பதற்கு எடுத்தோத் துண்டோ

ரூபமாகிய லிங்கந்தேவராற் பூசிக்கப்பட்டது' என்னும் மந்திர மாவது:—'தவ ச்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தேஜநிம சாரு சித்ரம் | பதம்யத்விஷ்ணோருபமம் நிதாயி தேந பாஸி குஹ்யம் நாம கோநாம்' (ருக்வே. ௫. ௩. ௩) என்பது.

௩௪. அதர்வசிரோபநிடதத்தில் மகாதேவாதி நாமங்களுடன் பகவநாமமும் கூறப்படுதலை 'அதகஸ்மாத் உச்யதே பகவாந் யஸ்ஸர்வா நபாவாந் நக்ஷதயாத்மஜ்ஞாநம் நிரீக்ஷயதி யோகம் கமயதி தஸ்மாதுச்யதே பகவாந்' என்னு மந்திரத்தானறிக.

திருமால் பெருமை கூறும் புராணம் பாகவத மெனப் படுதலின் திருமாலே பகவப் பெயருடையாரெனின், சிவ

வெனின்;—அதர்வணவேத முடையார் சிவ நாமங்களுட் பகவநாமமுங் கூறுதலானும், சுவேதாச்சுவதரோபநிடதஞ் சிவபிரானையே "பகேசன்" எனக் கூறுதலானும் எடுத்தோதத்துணிவென்க. நிகண்டு நூலுடையார் பூசிக்கப்படுங் குணமுடையானையே பகவனென்ப.

இனி மனுதித்திரயத்தானுஞ் செயப்படும் ௩௫
பூசை சிவபிரானுடையதே, திரு உருத்திரத்
தோடு ஓதப்படும் "அவனைத்துதி" என்னு மந்
திரத்தான் விதிக்கப்பட்டமையின். அன்றியும்,
உபநிடதங்களெல்லாஞ் சிவோபாசனை செயற்பாற்
றென முறையிடுகின்றன. அவற்றுள், நாராய
ணோபநிடதம்பற்றிச் சிவோபாசனையை ஆராய்கு ௩௬
தும். நாராயணோபநிடதத்திற் கூறிய உபாசனை ௩௭
சிவோபாசனை யென்பதூஉம், அதன்கட் கூறிய

பிரானுக்குப்போலத் திருமாலுக்கு அப்பெயர் வேதபடித மன்மையின் அது பொருந்தாது. **சுவேதாசுவதரோபநிடதத்**தில் சிவபிரானைப் பகேசனென்று துதிக்கும் மந்திரமாவது:—'ஸ வ்ருக்ஷகாலாக்ருதிபி: ப்ரோ அந்யோ யஸ்மாத் ப்ரபஞ்ச: பரிவர்ததேயம் | தர்மாவஹம் பாபநுதம் பகேசம் ஜ்ஞாத்வா த்மஸ்தமம்ருதம் விச்வதாம||' (சுவேதா. ௬. ௬) என்பது. இம்மந்திரத்து வரும் பகேச மென்பதை இக்காலத்தொரு சாரார் பவேச மெனத்திருத்திப் பிழைபட்டனர்,

௩௫-௩௬. மனுதித்திரயத்தானுஞ் செய்யப்படும் பூசை சிவபிரானுடையதே என்பதை விதிக்கும் மந்திரமாவது:—'தமுஷ்டுஹி ய: ஸ்விஷு: ஸுதந்வா யோ விச்வஸ்ய க்ஷயதி

உபாசிக்கப்படும் பொருளினது உருவஞ் சிவரூப மென்பதூஉம், மீமாஞ்சகர்கூறும் உபக்கிரமோப சங்கார நியாயம்பற்றித் துணியப்படும், அதன் கண் உபாசனையைக்கூறிய தொடங்கிய உபக்கிர மத்தின்கண்ணுள்ள வாக்கியஞ் சிவரூபங்கூறி முடிந்த உபசங்கார வாக்கியத்தோ டியைந்து
ருஅ ஒரு பொருள் படுதலின். இங்ஙனந் துணியப் படவே, ஆண்டு நாராயணனுக்கு உபாசிக்கப் படுந்தன்மையும் உபாசனையாந்தன்மையும் ஓராற் றானும் பொருந்தாமையின், அவன் அவ்விரண்டு மல்லனென்பதூஉம், பாரிசேடத்தால் உபாசக னென்பதூஉம், போதரும். அல்லதூஉம், ஆண்டு "நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகா மத்தியிற் பரமான்மாவுளன்" என்ற வாக்கியமே வேறு பிரமாணம் வேண்டாது, அவனுபாசக
ருகூ னென்பதை வலியுறுத்தும். அது வலியுறுத்து மாறு என்னையெனின்: "நாராயணனுடைய இருதயத்திற் பரமான்மா உளன்," என்று

பேஷஜஸ்ய | யக்ஷ்வா மஹே ஸௌமநஸாய ருத்ரம் நமோபிர் தேவமசுரம் துவஸ்ய' (ருக்வே. ரு. சயஉ. கக) என்பது.

உபாசனையைக் கூறிய பகுதியாவது நாராயணோப நிடதத்துவரும் 'ஸஹஸ்ர சீர்ஷம் தேவம்விச்வாக்ஷம் விச்வ சம்புவம்' என்று தொடங்கும் பகுதி.

'நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகாமத்தியிற் பரமான்மாவுளன்' என்ற வாக்கியமாவது:—'தஸ்யா சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:' என்பது.

கூறினமையின், அவனைப் பரமான்மாவென்றல் பொருந்தாமையி னென்க. நாராயணன் றன திருதயாக்கினிக்க ணிருந்துகொண்டு தானே தன்னை யுபாசிப்ப னெனின், அக்கூற்றியாவர்க்கு நகைவிளைக்கு மென் றொழிக.

அற்றேலஃதாக; நாராயணன்மேல்வைத்து உபாசனையை வருணித்தவா றென்னையெனின்;- நாராயணனுடைய விருதயமும், அதன் கட் டகரமும், அதன்கட்பெரிய அக்கினியும், அதன் சிகாமத்தியிற் பரமான்மாவு முண்டென் றங் ஙன மருத்தவாதம்படக் கூறுமுகத்தானே, ஆச ரிப்பவருக்குச் சிரத்தை போதர விசிட்டபுரு டன்மேல் வைத்து, உபாசனையை விதித்தவா றென்க. சω

அற்றேல், ஆண்டு இருதயம் வேறோதப் பட்டதனுன் அது நாராயணனுடைய தென்றல் பொருந்தாதாம்பிறவெனின்;— அற்றன்று. நாரா யணப்பிரகரணத்திற் கூறப்பட்ட விருதயம் பிற ரைச்சார்தற் கியைபின்மையின் அஃது அவ னுடைய தென்றல் பொருந்துமென்க. சக

அற்றே லஃதங்ஙனமாக; யதிப்பிரகரணத் திற்பூர்வாநுவாகத்தான் விதிக்கப்பட்ட உபாசனை யாவர்கண்ணதெனின், ஆண்டை யியைபு பற்றி ஆராய்வார்க்கு அதுவுஞ் சிவபிரான்கண்ண தென்பது தெற்றெனப்புலப்படுமென்க. அஃ சஉ

தேல்; ஆண்டு நாராயணனைப் "பரப்பிரமம்" என்றும், "பரஞ்சோதி" என்றும், "பரதத்துவம்" என்றுங் கூறுதன் மலைவாம்பிறவெனின்;— அற்றன்று: மாந்திரிகன் கருடபாவனையாற் கருடனே டத்துவிதமாய் நின்றவழி அக் கருடனென்றே கருதப்படுதல்போல நாராயணன் சிவபாவனையாற் சிவபிரானே டத்துவிதமாய் நின்றவழி அங்ஙனம் உபசரிக்கப் பட்டானாகலின்,
சரு மலைவுயாண்டையதென்க. இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் "யானே உலகெல்லாமாயினேன்" என்றதூஉம், சிவபிரானது விசுவரூபத்தைத் தான்காட்டியதூஉம், "ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக" என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்து நோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மே விட்ட

சஉ. நாராயணனைப் பரப்பிரமமென்றும் பரஞ்சோதியென்றும் பரதத்துவமென்றுங் கூறும் மந்திரம்:—'நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண:பர:' எனவும் 'நாராயணபரோ ஜோதிராத்மா நாராயண:பர:' எனவும் வருவன.

சரு. 'இவ்வொற்றுமை பற்றியன்றே' என்பது முதல் 'சிவபிரான் திருமுடி மேற்கண்டதூஉ மென்க' என்பது வரையுள்ள பகுதி ஸ்ரீ சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியத்து அருளிச் செய்யப்பட்டதாகும். (இரண்டாஞ் சூத்திரத்து முதலதிகாரணவுரையிற் காண்க)

போதுகள் சிவபிரான் றிருமுடிமேற் கண்டதூஉ மென்க.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதி ௪௪ யில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு சிவ பிரான்படிக்கப்படுதன் மலைவாம் பிறவெனின்;- அற்றன்று : ஆண்டுப் பரமான்மாவின் விபூதி யில்வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு படிக் கப்பட்டமையின் சிவசத்தத்தா னுணர்த்தப்படுப வன் சங்காரத் தொழிலைச்செய்யும் அரனென் பது தெள்ளிதிற் பெறப்படுதலினானும், ஆண்டுப் பரமான்மா வெனப்பட்டவர் அயன் அரி அரனென்னுந் திரிமூர்த்திகளையு நியமிக்குந் துரிய மூர்த்தியாகிய சிவபிரானாகலானும், சிருட்டித் தொழில் திதித்தொழில்களைச் செய் யும் அயனரிபோற் சங்காரத் தொழிலைச் செய்

௪௪. பரமான்மாவின் விபூதியில் பிரமன் முதலிய தேவரோடு படிக்கப்படுபவர் சங்காரத் தொழில் செய்யும் அரனே: அவர் சிவசத்தத்தாற் கூறப்படுகின்றனர். அம்மந் திரமாவது:—'ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ்ஸேந்த்ரஸ்ஸோக்ஷர: பா மஸ்ஸ்வாரட்' (நாராயணோபநிடதம்) என்பது.। இக்காலத்தார் 'ஸ ஹரி:' எனச் சேர்த்துப் படித்தல் இடைச்செருகல்.

சிவபெருமான் மும்மூர்த்திகளையும் நியமிப்பவரென் பது 'த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தநம் | உர் வாருகமிவ் பந்தநாந் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்' (ருக்வே. எ. ருசு. கக.) எனவரும் மந்திரத்தானறியப்படும். இம்மந் திரத்து வருந் திரியம்பக சப்தம் மூவர்க்கும் பிதா எனப் பொருள்படும். முதனூலின் சுருவது சுலோகவுரை பார்க்க.

யும் அரனும் அவரது விபூதியே யாகலானும் மலைவுபாண்டையதென்பது.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் நாராயணனைப் படியாததென்னையெனின்;— கைவல்லியோபநிடதத்திற் கூறிய தகரவித்தையில் அவனும் விபூதியிற் படிக்கப்பட்டானுகலின் இவ்வுபநிடதத்திற் படியாதுய்த்துணர வைத்ததென்பது.

சரு சிவபிரான் விச்சுவாதிகர்; நாராயணன் விசுவம். அவர் யாகத்துக்கதிபர்; அவன் யாகம். அவர் மூலப்பிரகிருதிக்கு நிமித்தகாரணர்; அவன் மூலப்பிரகிருதி. இங்ஙனமாகலின், இருவர்க்கும் வேற்றுமை பெரிதென்க.

சிவபெருமான் துரியமூர்த்தி யென்பது 'மும்மூர்த்திகளுங் காரணரல்லர் சிவனொருவனே காரணன்' எனவரும் அதர்வசிகோபநிடதந் தாலறியப்படும்.

தகரவித்தையில் நாராயணன் பரமான்மாவின் விபூதியில் வைத்துப் படிக்கப்படுதலை 'ஸ ப்ரஹ்மா ஸசிவ: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட் | ஸஏவ விஷ்ணு: ஸ ப்ராண: ஸகாலோ அக்நி: ஸசந்த்ரமா||' எனவருங் கைவல்லியோபநிடதமந்திரத்தாலறிக.

சரு. சிவபிரான் விசுவாதிகரென்பது 'விச்வாதிகோருத்ரோ மகர்ஷி' என்னும் மந்திரத்தானும் நாராயணன் விசுவமென்பது 'விச்வம் நாராயண: பர:' என்னு மந்திரத்தானு மறியப்படும். சிவபிரான் யாகாதிபதி யென்பது 'மேத

அற்றேல், நாராயணனை "விசுவபதி" என்ற ௪௬
தென்னையெனின் ;—அது துதிவாத மென்க. ௪௭
வேதத்தி னொரோவழிச் சிவபிரானை "விசுவம்"
என்றது, அவர் அதனை அதிட்டித்திருத்தல்
பற்றியாகலின், அஃதுபசார மாத்திரையே
யென்க. இவ்வுண்மை வேதரகசியத்தையுணர்ந்த
பண்டிதர்க்கே விளங்கும். அது முற்றுணர் வெய் ௪௮
திய காத்தியாயன முனிவர் கிருகியசூத்திரத்தில்
எல்லாப்பொருளுஞ் சிவபிரானால் அதிட்டிக்கப்
படுதல் பற்றி எல்லாக் கிரியையினும் அவர்க்கு
வணக்கங் கூறியதனானும், அதனை வலியுறுத்தற்
பொருட்டு "எல்லாப் பொருளு முருத்திரன்"

பதிம் ருத்ரம்' எனவரும் ருக்வேத மந்திரத்தானும் நாராய ணன் யாகமென்பது 'யக்ஞோவை விஷ்ணு:' எனவரும் மந்திரத்தானும் அறியப்படும். சிவபிரான் மூலப்பிரகிருதிக்கு நிமித்தகாரணரென்பது 'ய: காரணாநி நிகிலாநி தாநிகாலா த்மயுக்தாந் யதிதிஷ்டத்யேக:' என்னும் மந்திரத்தானும் நாராயணன் பிரகிருதி யென்பது 'வாஸுதேவ: பராக்ருதி:' என்னும் மந்திரத்தானும் அறியப்படும்.

௪௬. நாராயணனை விசுவபதி யென்னும் மந்திரமாவது:- 'பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்' எனவரும் நாராயணோப நிடத மந்திரம்.

௪௭. சிவபெருமான் விசுவமெனப்படுவது 'ஸர்வோ வை ருத்ர :' என்னும் மந்திரத்தாலறியப்படும்.

௪௮. காத்தியாயனர் கிருகிய சூத்திரத்தில் 'நமோ ருத்ராய பதிஷதே ஸ்வஸ்தி மா ஸம்பாரய' 'நமோ ருத்ராய

என்னும் அநுவாகத்தை உதாகரித்தமையானும் விளங்கும். சிவபிரானை "விசுவம்" என்றதை உபசார மென்றறிய மாட்டாது, உண்மை யென்று மயங்குவாரு முளர்.

சசு இங்ஙனம் உபாசனையும், உபாசகனும், உபாசிக்கப்படும் பொருளாகிய விரூபாக்கரும், அவருடைய நாநாவித விபூதியும் நாராயணோபநிடதத்தாற் போந்தவாறு காண்க.

ருய அற்றேல் லஃதாக; சிவபிரானைப் பிரதிபாதிக்குமிது நாராயணோபநிடத மென்றாயவாறென்னை யெனின்;—புருடசூத்தம் நாராயணனை இருடியாக வுடைத்தாயவாறு போலச் சிவபிரா

வநஸ்பதிஷதே ஸ்வஸ்திமா ஸம்பாரய' 'நமோ ருத்ராய பித்ருஷதேஸ்வஸ்திமா ஸம்பாரய' முதலாகக் கூறுதல் காண்க.

சக. இந் நாராயணோபநிடதப் பொருளைச் சிவஞான சுவாமிகள், 'சேந்தபொற் குண்டத் தோங்குஞ் சிகைத்தழன் மிசையே கம்ப, வேர்தையா வாகித் தேத்தும் புகைபொதி வேள்விச் சாலை, யேய்ந்தசீர்த் தகர வித்தை முறைப்படி யிதய கஞ்சப், பூந்தழற் சிகைமே லீசற் போற்றுமா யவனை யொக்கும்' என்றருளிச் செய்தமைகாண்க. (காஞ்சிப் புராணம். திருநகரப்படலம். கககூ-வது செய்யுள்)

ருய. புருட சூக்தத்தின் இருடி நாராயணனென்பது 'ஸஹஸ்ரசீர்ஷேதி ஷோட சர்சஸ்ய ஸூக்தஸ்ய நாராயண: புருஷோ நுஷ்டு பந்த்யாத்ரிஷ்டுப்' என்பதனுனறிக.

எச்சம்—யாகம்.

ணைப் பிரதிபாதிக்கு மிது எச்சரூபனுகிய நாரா யண இருடியினுன் உபதேசிக்கப்பட்டமையின், நாராயணேபநிடதமென்ருயதென்க.

இவ் வுபநிடதஞ் "சிவபிரானிடத்தினின்றும் ருக இரணியகருப்பன் றேவர் யாவர்க்கு முதற்கட் டோன்றினன்" என்று கூறுகின்றது. இங்ஙன மாகவும், "நாராயணனிடத்தினின்றும் இரணிய கருப்பன் ருேன்றினன்" என்றும், "அவனிடத் தினின்றுஞ் சிவபிரான்ருேன்றினர்" என்றும், அறிவில்லார் பிதற்றுப. சிவயோகிகளுடைய ருஉ இருதயமுதலிய வைந்திடத்தினுஞ் சிவபிரானுக் குத் தோற்றரவுண்மையின், இரணியகருப்ப னுடைய இலாடமத்தியிற் சிவபிரான் ருேன்றி யருளின ரென்னும் வழக்காற் போதரும் இழுக் கென்றே வென்பது.

திரு உருத்திரத்துட் டிருவைந் தெழுத் ருந திருத்தல் போலச் சிவமந்திரங்கட்குயிராய்ச் சிவ

ருக. சிவபிரானிடத்தினின்றும் இரணிய கருப்பன் றேவர்யாவர்க்கு முதற்கட் டோன்றினனென்னும் மந்திர மாவது:—'யோ தேவாநாம் ப்ரதமம் புரஸ்தாத் விச்வாதி கோ ருத்ரோ மகர்ஷி: | ஹிரண்யகர்பம் பச்யத ஜாயமாநம் ஸநோதேவச் சுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து' என்பது. 'அய னைப் படைத்த பரமன்' என்பது தமிழ் வேதம்.

ருஉ. இருதய முதலிய ஐந்திடமாவன:—இருதயம், காது, பிரமரந்திரம், நாக்கு, புருவநடு என்பன.

ருந. மந்திரத் திருமேனியாயுள்ள பஞ்சப்பிரமமந்திர மாவது:—'ஸத்யோ ஜாதம் ப்ரபத்யாமி ஸத்யோஜாதாய

பிரானுக்கு மந்திரத் திருமேனியாயுள்ள பஞ்சப் பிரமம் இதனகத்துண்மையின், இது மகோப நிடதமெனவும் பெயர் பெறுமென்க.

ருச இனிப் பஞ்சப்பிரம மந்திரத்துளொன்ருகிய ஈசான மந்திரம் சிவபிரான் "வித்தையெல்லா வற்றிற்கு மீசர்" என்றும், "பூதங்களெல்லா வற்றிற்கும் பதி" என்றும், "பிரமாவுக் கதிபதி" என்றும், "பிராமணருக்கதிபர்" என்றுங் கூறு

வைநமோ நம:| பவே பவே நாதிபவே பவஸ்வமாம்| பவோத் பவாயநம:|| **வாமதேவாய** நமோ ஜ்யேஷ்டாய நம: ச்ரேஷ் டாய நமோ ருத்ராயநம: காலாயநம: கலவிகரணாய நமோ பலவிகரணாய நமோ பலாயநமோ பலப்ரமதநாயநம: ஸர்வ பூததமநாய நமோ மநோந்மநாய நம:|| அகோரேப்யோ அத கோரேப்யோ கோரகோரதரேப்ய:| ஸர்வேப்ய: ஸர்வ சர் வேப்யோ நமஸ்தே அஸ்து ருத்ரரூபேப்ய:|| **தத்புருஷாய** வித்மஹே மஹாதேவாய தீமஹி| தந்நோ ருத்ர: ப்ரசோத யாத்|| **ஈசாந:** ஸர்வவித்யா நாமீச்வர: ஸர்வ பூதாநாம் ப்ரஹ் மாதிபதிர் ப்ரஹ்மணோ அதிபதிர் ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம் ||என்பது. இம்மந்திரங்களையே முப்பத்தெட் டுக் கலைகளாகப் பிரித்துச் சிவபிரானுக்கு நியாசஞ் செய்யு மாறு சிவாகமம் அருளிச் செய்கின்றது.

ருச. வித்தையெல்லாவற்றிற்கு மீசர் 'ஈசாந: ஸர்வ வித்யாநாம்' என்பதனுனும், பூதங்களெல்லாவற்றிற்கும் பதி 'ஈச்வர: ஸர்வபூதாநாம்' என்பதனுலும், பிரமாவுக்கதிபதி 'ப்ரஹ்மாதிபதி:' என்பதனுனும், பிராமணருக்கதிபர் 'ப்ரஹ் மணோ அதிபதி:' என்பதனுனும் அறியப்படும்.

K. CHIDAMBARA MUDALIAR. 31 DEC 1925 SHIYALI.

கின்றது. இதன்கட் "பிரமாதிபதி" என்ற ருடு தற்கு, வேதத்திற் கதிபதி என்றுரைப்பாரு முளர். மேல் "வித்தையெல்லாவற்றிற்கு மீசர்" என்றதனுற்றுனே வேதமும் அதன்வழித் தோன்றிய பிறவித்தைகளும் அடங்குதலின், அது போலியுரை யெனமறுக்க.

இருக்கு முதலிய வேதத்திரய நிதிக்குக்கோச ருசு மாகிய மண்டலத்திலிருக்கும் ஆதித்தனை அதிட் டித்திருக்கும் புருடராகிய சிவபிரானை ஆதித்

ருசு. ஆதித்தியோப நிடதத்தில் 'ஏஷ பூதாநாமதி பதிர்ப்ரஹ்மண:' என வருதல் காண்க. பாஞ்சராத்திரிகள் 'த்யேயஸ்ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்தீ நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந் நிவிஷ்ட:। கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீஹாரீ ஹிரண்மயவபுர்த்த்ருத சங்க சக்ர:॥' என்னும் வசனம் பற்றி ஆதித்தியாந்தர்யாமி நாராயணனென்பர். ஆதித்தியாந்தர்யாமி சிவபெருமானே என்பதற்கு மேலேகாட் டிய பிரமாணங்களெல்லாம் வேதபடிதமானவை. அவ் வச னங்களின்முன் இங்கே காட்டப்பட்ட ஸ்மிருதிவசனம் துர் பலமுற்று ஒழியும்; முன் கஎ-வது சுலோக விளக்கத்திற் காட் டப்பட்ட 'ஆகாசாத் பதிதம் தோயம்' என்று தொடங்கும் வச னம்போல. இவ்வுண்மை யறியார் அவர் காட்டிய வசனம் வேதவசன மென மயங்குப. கூரேசவிஜய மென்னும் நூலில் காயத்திரி மந்திரப் பொருள் நாராயணரென்று கூறவந்த இடத்து இம்மிருதி வசனத்தை வேதவசன மெனக் கொண்டு 'தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ' என்னுஞ் சாந் தோக்கியச் சுருதியோடிணைத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. அந்நூலிற் கூறப்பட்ட காரணங்களனைத்தும் போலியேயாம்.

தியோபநிடதம் "இவனே பூதாதி பதி" என்று
௫எ சுட்டிக் கூறுகின்றது. "இவனே பூதாதிபதி"
என்றன் மாத்திரையானே ஆதித்தியாந்தரியாமி
சிவபிரானென்பது துணியப்படாதாம் பிறவெ
னின்;—அற்றன்று: "இரணியமயன்" என்றும்,
"இரணிய வாகு" என்றும், "அம்பிகாபதி"
என்றும், "உமாபதி" என்றும், அவ்வுபநிட
தங் கூறுதலின், ஆதித்தியாந்தரியாமி சிவ
பிரானே யென்பது தெற்றெனத் துணியப்படு
௫அ மென்க. மண்டலமும், அதிலாதித்தனும், அவற்
கதிட்டாதாவாகிய சிவபிரானும், அவர் விபூதி
யும், அவற்றினை யுணர்ந்தாரெய்தும் பயனு

நீலகண்டபாடியத்து அந்தராதிகரணத்தில் இம்மிருதிவசனம் ஆராயப்பட்டு 'த்யேயஸ்ஸதேத்யாதி லௌகிக வசநம் பாக்த மேவ' என்று ஒதுக்கப்பட்டது. முதனூலின் ௫௬-வது சுலோக வியாக்கியானத்திலும் **சிவலிங்கபூபதி** இம்மிருதி வசனத்தின் அப்பிராமாண்யத்தை விளக்கினர்.

௫எ. இரணியமயன் என்பது 'ஏஷாநந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' என்பதனாலறியப்படும், இரணியவாகு அம்பிகாபதி உமாபதி யென்பன 'நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே பசுபதயே நமோ நம:' என்னும் மந்திரத்தாலறியப்படும். **சாந்தோக்கிய உபநிடதத்தும்** 'ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:||' எனக்கூறப்பட்டது.

மென்னுமிவை, ஆதித்தியோப நிடதத்தாற்
போதரும் பொருள்களாம். இதனை யுணர்ந்தார் ௫௯
காயத்திரியையு முணர்ந்தாரேயாவர்.

இனிக் காயத்திரிக்குரிய பொருள் சிவ ௬௦
பிரானே யெனத் துணிதற்கு, ஆதித்தியோப
நிடதமே அமையுஞ்சான்றும். காயத்திரி மந்
திரப்பொருள் சிவபிரானே; சவிதாவன்று.
என்னை? அதனகத்துள்ள பர்க்கசத்தஞ் சிவபிரா
னுக்கே இடுகுறியாகலானும், அவரே அறிவைப்
பிரேரிப்பவராகலானு மென்பது. அப் பர்க்கசத் ௬௧
தம் அகாராந்தமன்று, ஸகாராந்தமெனின்;—
அதனகத்துள்ள யத்சத்தமும் தத்சத்தமு
முறையே புல்லிங்கமு நபுஞ்சகலிங்கமு மாகலிற்
றம்முள் அந்வயமுறா. ஆகவே, அந்வயமாத
ற்குரிய அபின்னலிங்கத்தை அவாய் நிற்கும்.
அதனால், ஸகாராந்த மென்றல் பொருந்தாதென
மறுக்க. வியாகரணநூலார் அசுன் பிரத்தியய ௬௨

---

௫௯. காயத்திரி மந்திரமாவது:—ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்யதீமஹி | தியோயோ ந: ப்ரசோதயாத்|| என்பது. இம்மந்திரம் இருக்குவேதத்து ௩வது மண்டலத்து ௬௨-வது சூக்தத்து ௰-வது மந்திரமாதல் அறிக.

௬௰. சவிதா—சூரியன்.

௬௨. வியாகரணநூல்—பாணினீயம். இங்கே குறிக்கப்பட்ட சூத்திரம் பாணினீயம் ௬. ௧. ௧௯௭. அச்சூத்திரமாவது 'ஞ்நித்யாதிர் நித்யம்' என்பது.

மைத்திராயணச் சுருதியாவது:—'அதபர்கோ தேவஸ்ய

மாக கஞ்ஞுப்பிரத்தியயமாக ஈற்றில் வந்த பதங்
களுக்குங் ஆதியில் உதாத்தசுரம் வருமென்ற
வின், மைத்ர்ராயணச் சுருதியில் அகாராந்த
மாகக் காணப்படுதலின் திரிந்தகாரகமாகிய
௯௩ களுந்தமேயென்க. இந்த மைத்திராயணச் சுருதி
"பர்க்கர் தியானிக்கற் பாலர்" என்றும், "பர்க்
கப்பெயருடையான் உருத்திரன்" என்றுங் கூறு
முகத்தானே, அது ஸகாராந்த மென்றலை நிரா
௯௪ கரித்தது. காயத்திரியின் முதற் பாதத்தைக்
கடாவிடைகளாற் கூறி, "இரண்டாம் பாதம்
பர்க்கமயம்" என்ற தலவகாரப்பிராமணமும்
ஸகாராந்த மென்றற்கு இயையாது.

௯௫ அற்றேல், "எந்தப்பர்க்கன் எமது புத்தியைப்
பிரேரிக்கின்றான் அதனைத் தியானிக்கிறோம்"
என்று லிங்கபேதம் போதர அந்வயித்தல்

தீமஹீதி ஸவிதாவை தேவஸ்திதாயோ அஸ்ய பர்க: கம் ஸம்
சிந்தயாமீத்யாஹுர் ப்ரஹ்மவாதிந:' என்பது.

௯௩. முன் ௯உவது சுலோக விளக்கத்திற் கூறப்பட்ட
சுருதியே பர்க்கர் தியானிக்கற்பாலரென்று கூறுஞ் சுருதி.
பர்க்கப்பெயருடையான் உருத்திரனென்னுஞ் சுருதியாவது:-
'ருத்ரோ ப்ரஹ்மவாதிநோ அதபர்க இதி' என்பது.

௯௪. தலவகாரப்பிராமண மந்திரமாவது:—த்விதீய:
பாதோ பர்கமய" என்பது. சாவித்திரி யுபநிடதம் பார்க்க.

௯௫. லிங்கபேதம்--பாலில் மாறுபாடு.

யாக்ஞவல்கியர் கூறுமாறு:—'தேவஸ்ய ஸவிதுர்மத்யே
யோ பர்கோ நோ தியஸ்ஸ்வயம் | ப்ரசோதயாத்தம் வரேண்

நமக்குஞ் சாலாதெனின்;—காயத்திரிக்குரிய பொருளாகிய சிவபிரானது பெயராகிய பாக்க சத்தம் அவரின்வேறாகாத ஒளிக்கு முண்மையின், "அதனைத் தியானிக்கிறோம்" என்பது அந்தப் பர்க்கனுடையதாய வொளியைத் தியானிக்கிறோமென்று பொருள் படுதலின், எமக்கது சாலாமையாண்டை யதென்க. இது சாம்பமிருதி நூற் றுணிபென்க. "அதுவேயக்கரம்" என் ௬௬ றும்,"அதுசவிதாவினுன் வரிக்கப்படும்பொருள்" என்றும், "அதனினின்றும் அறிவங்குரித்தது" என்றுஞ் சுவேதாச்சுவதரோபநிடதங் கூறுதலினுங்காயத்திரிக்குரிய பொருள் சிவபிரானேயென்பது தெற்றெனவுணர்க. இக்காயத்திரி மந்திரம் ௬௭ பர்க்கராகிய சிவபிரானையே யுணர்த்துவதாயி

யந் தீமஹீத்யந்வயக்ரம:||' என்பது. சாதாதபர் கூறுமாறு 'தர்மாதி கோசரா யோஹோ தியோபர்க: ப்ரசோதயாத் | தேவஸ்ய ஸவிதுச்சாபி வரேண்யம் தமுபாஸ்மஹே||' என்பது.

௬௬. சுவேதாச்சுவதரோபநிடத மந்திரமாவது:— 'ததக்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரக்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ||' என்பது. (சுவேதா. ௪. ௧௮.)

௬௭—௬௯. இவ்வுண்மையைச் சிவஞான சுவாமிகள் சிவதத்துவவிவேகத்திற் புருடசூக்தவிசாரணையில் 'விருப்புறுமேனோர் பூசனை விதியுள் விளம்பினு மவ்விதிக் கேற்பக், கருத்துறும் பொருட்டுப் பொருள் விரித்தறவோர் காட்டினுமிது வழுப்படாதே' (சிவதத்துவவிவேகம் ௨௨.) என்றருளிச் செய்தனர்.

னும், "சவிதா" வென்னுஞ் சத்தமாத்திரைபற்றி ஆதித்தன்மேலுஞ்செல்லும். மீண்டும் ஒருகடவுளை யுணர்த்துமந்திரஞ் சத்த ஒப்புமையாற் பிற கடவுண்மேலுஞ் செல்லுமென முனிவர் கூறுப:
௩அ அது அருக்கனைத் தெய்வமாகவுடைய இருக்கு "விசுவதேவ" சத்தவொப்புமையாற் பிதிரர் மேலும், "புஷ்ய" சத்தவொப்புமையாற் பூடண தேவர் மேலுஞ் செல்லுமாற்றானுணர்க. பிறவு
௩௯ மன்ன. இனி இவ்வாறன்றிக், கிரகபூசாவிதியில் "சம்" என்று தொடங்கிய மந்திரத்தாற் சனிபூசையும், "உத்புத்தியசுவ" என்றதனாற் புதபூசையும் கூறுதலுங்காண்க. "இருக்கு யசுசு
௪0 சாமமென்னும் வேதமூன்றனையு நன்குணர்ந்த

௩அ. அருக்கனைத் தெய்வமாகவுடைய இருக்காவது:— 'விச்வோதேவஸ்ய நேதுர் மர்தோ வுரீதஸக்யம் | விச்வோ ராய இஷுத்யதி த்யும்நம் வ்ருணீத புஷ்யஸே||' என்பது. (ருக்வே. ரு. ருய. க.)

௩௯. 'சம்' என்று தொடங்கும் மந்திரமாவது:— 'சம்நோ தேவீரபிஷ்டய஽ ஆபோபவம்து பீதயே | சம்யோர பிஸ்ரவம்து ந:||' என்பது (ருக்வே. எ. கூ. ந.)

'உத்புத்தியசுவ' என்னும் மந்திரமாவது:--- 'உத்புத்யஸ்வாக்நே' என்றுவரும் மந்திரம்.

௪0. மநுஸ்மிருதி வாக்கியமாவது:---'த்ரிப்யஏவ து தேவேப்ய: பாதம்பாதம துதுஹத் | ததித்ய்ருசோ அஸ்யாஸ் ஸாவித்ர்யா: பரமேஷ்டீ ப்ரஜாபதி:||' என்பது (மநுஸ்மிருதி உ. எஎ.)

பிரமன் அவற்றின் சாரமாகிய மூன்று பாதத்தை யுடைத்தாய இக்காயத்திரியைக் கண்டான்'' என்று மநுவாற் கூறப்பட்டது.

அரசர்க்குரிய இறைப்பொருளை அவன் வினை ௪௧ செய்வார் குடிகளிடத்திற் கொண்டு அவன்மாட் டுச் செலுத்தல் போலச் சிவபிரானுக்குரிய அவிசை அக்கினி யாகத்திற்கொண்டு அவர்மாட் டடைவிப்பனென்பது, அர்ச்சுனன் கண்ணன் மாட்டுச் சமர்ப்பித்த ஈசசம்பந்தமான திரவியங் கள் சிவபிரான் மாட்டுச் சென்றடைந்தமையால்

---

௪௧. 'கண்ணன்மே லணிமல ரனைத்துங் காயெரி, வண் ணன்மேற் காண்டலு மகிழ்ந்து மேதினி, யுண்ணுமா தவன் சிவ னுருவ மென்றுணர்ந், தண்ணலு முடல்புள கரும்பினன ரோ'—வில்லிபாரதம், பதின்மூன்ளும் போர்ச்சருக்கம்.
௨௧௩. இவ்வாறு கண்ணபிரான் சிவபிரானுக்குத் திருமேனி யாம் பெருமை பெற்றமையை நம்மாழ்வாரும் வியந்து 'தீர் த்தனுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ், சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு, பார்த்தன் றெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை, பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே' திருவாய் மொழி ௨. அ. ௬.) என்று கூறினர். ஆயின், அடிமேற் சேர்த்தியது முடிமேற் கண்டு என்று கூறியது அபிமானம் பற்றியன்றி உண்மை பற்றியன் றெனக. மூத்தோள்ளாயிரத்தில் 'செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப், பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்று—லெங்கு, முடிமன்னர் சூடியபூ மொய்ம் மலர்த்தார் மாற, னடிமிசையே காணப் படும்' என வருதலுங் காண்க.

௭௨ இனி துணரப்படும். "யாகங்களிற் செய்யப்
படுஞ் சோமவிளியும் பசு நியோசனமுஞ் சிவ
பிரான்பொருட்டுச் செயற்பால" என்றும், "பால்
தயிர்முதலிய அவிசும் அவருடையன" என்றும்,
௭௩ வேதங் கூறும். சோமமும் பசுவுங் கவ்வியமுஞ்
சிவபிரானுடைய வாதல் பற்றியன்றே பசுவின்
அவிசிற் றத்தமக்குரிய கூற்றை அவராணையாற்
றேவர் பெறுவாராயிற்றென்பது. பசுவின் அவி
சொழிந்தவற்றிற்குச் சிவபிரானதாணை பெறப்
பட்டதின்றாலெனின்;—தலைமைப் பொருளாகிய
பசுவின் அவிசுக்கு அது பெறப்படவே, உபலக்
கணத்தால் பசுவின் அவிசொழிந்தவற்றிற்கும்
௭௪ அதுதானே போதருமென்க. பசுபந்தனக் கிரி
யை மாத்திரையே சிவபிரானதாணையாற் செயற்
பாற்றென்பதும் பொருந்தாது, "எல்லாக்கிரியை
யுஞ் சிவபிரானதாணையாற் செயற்பால" எனச்
௭௫ சாமவேதமுடையார் கூறுதலின். "அக்கினியிற்

---

௭௨. **சோமவிளிமந்திரம்:**—'அயம் ஸோமம் கபர்தி
நே க்ருதம் ந பவதே மது' என்பது. **பசுநியோசன மந்திரம்:**
'இமம் பசும் பசுபதே தே அத்ய பக்நாமக்நே ஸுக்ருதஸ்ய
மத்யே அநுமந்யஸ்வ ஸயுஜா யஜாம ஜுஷ்டம் தேவாநாமித
மஸ்து ஹவ்யம்' என்பது. பால் தயிர் முதலிய அவிசும்
அவருடையன என்பதற்கு மந்திரம்:—'ரௌத்ரம் கவி' என்
பது.

௭௪. **சாமவேத** முடையார் கூறுமாறு:---'த்வாம் ப்ர
பத்யே த்வயா ப்ரஸூத இதம் கர்ம கரிஷ்யாமி தந்மே ஸம்
ருத்யதாம் தந்ம உபபத்யதாம்' என்பது.

செயப்படுஞ் சோமாகுதியுஞ் சிவபிரானுக்கேயுரி
யது'' என யசுர்வேதமுடையார் கூறுப். ''யாகங் எசு
களில் எஞ்சிநின்ற பொருள்களும் யாகபதியா
கிய சிவபிரானுடையனவே'' என்று யசுர்வேதங்
கூறும். ''கவ்வியத்தானுஞ் சோம அவிசானும் எஎ
பக்குவசருவானுஞ் செயப்படும் இருபத்தொரு
யாகங்களுக்குஞ் சிவபிரானே அரசர்'' என
வேதங் கூறும். அற்றேல் '' துவமக்கினே '' எ௮
என்னு மந்திரமும், அதனையடுத்த மந்திரமும்
''உருத்திரனையுடைத்து அக்கினி'' என்று கூறுத
லின், உடைப்பொருளாகிய சிவபிரானுக்கு அரசு
பொருந்தாதாம் பிறவெனின்;—அற்றன்று. அர
சனையுடைத்து இப்பூமி யென்றவழிச் சேதனமா
கிய அரசன் உடைப்பொருளாதலும், அசேதன
மாகிய பூமி உடையானாதலுஞ் செல்லாமையின்
செல்லும்பொருட்டுப்பூமியையுடையான் அரசன்
எனமாறிக் கொள்ளப்படுமன்றே; அதுபோல
''உருத்திரனையுடைத்து அக்கினி'' என்றதூஉங்
கோடற்பாற்றாகலின், பொருந்தாமை யாண்
டையதென்க. ரௌத்திரபசுவிபத்தியில் இம் எகூ
மந்திரங்கள் சிவபிரானையே உணர்த்தலினா
னும் யாகத்திறைமை அவர்க்கே புரித்தென்க.

எஎ. சிவபிரானே யாகங்களுக் கரசரென்பது 'காத பதிம் மேதபதிம்' (ருக்வே. க. சங. ச.) என்னும் மந்திரத்தானும், 'ஆவோராஜாநம்' (ருக்வே. ச. ௩. க) என்னும் மந்திரத்தானும் அறியப்படும்.

அ0 அற்றேல், அக்கினியை யுடையான் உருத்திரனெனச் செவ்வனே கூறாது "உருத்திரனை யுடைத்து அக்கினி" என்பிறழக்கூறியதென்னை யெனின்;—ஒரு பயனோக்கி யங்ஙனங் கூறிற்றென்க. என்னையோ பயனெனின்;—உருத்திரனைப்பற்றியே அக்கினி சிறந்ததெனப் பொருட் பேறெய்துவித்தலே பயனென்க. தந்தையை யுடைய மாணவகனென்றற் றொடக்கத்தனவாகப் பிறண்டு மங்ஙனம் வருமாறறிக.

அக சிவபிரானுக்கு யாகபதித்துவம், உருத்திர சூத்த மந்திரத் தொகுதிக்குச் சிரோரத்தினம் போல அணிசெய்வதாய்ச் சிவநாம வலியுடைத்தாய யசுர்வேதத்தானன்றி, "மேதபதி" என
அ௨ இருக்குவேதத்தானுங் கூறப்படுமென்க. "நிலையாத் தேகம் விழுதற்கு முன்னர்ச் சிவபூசை செய்தற்பாற்று" என்ற சிவதருமவசனத்திற்கு மூலமாயதூஉம், இந்த "ஆவோ" என்னு மந்திரமேயென வறிக.

அக. உருத்திரசூத்தமென்பது திருவுருத்திரம். 'மேதபதி' என்று இருக்கு வேதங் கூறும் மந்திரமாவது:—'காதபதிம் மேதபதிம் ருத்ரம் ஜலாஷபேஷஜம் | தச்சம்யோ: ஸும்நமீமஹே||' என்பது. (ருக்வே. க. சங. ௪.)

அ௨. சிவதர்ம வசனமாவது :—'யாவந்யாதி மரணம் யாவந்நாக்ரமதே ஜரா | யாவந்நேந்த்ரிய வைகல்யம் தாவத் பூஜய சங்கரம்|| " என்பது. இதற்கு மூலமாயது 'ஆவோ

அரசன் கோபமிலனுய் இன்முகமுடையனுயி அங னும் அவன்மாட்டு அச்சங் குடிகளுக்கு நிகழு தல் இயற்கையே. அது போலச் சிவபிரான் இன்னருண் மூர்த்தியாயினும், அனேக சூரியர் ஒரோவழித் தலைப்பட்டு விளங்குதலின், திரு உருத்திரத்துட் "பீமன்" எனப்படுகின்ருர். இன்னும் வேதஞ் சிவபிரானை "அஞ்சத்தக்க அச வச்சிரம்" என்றுங் கூறும். இங்ஙனஞ் சிவ பிரான்மாட் டச்ச காரணத்துவ முண்மையி னன்றே, வாயு, பாநு, அங்கி, இந்திரன், இயமன் முதலிய தேவர் தத்தந்தொழில்களை அஞ்சி வகித்துய்க்கின்ருரென்க. இப்பய வேதுவைப் பிரம விலக்கணமென்ப.

ராஜாநம்' என எஎ-வது சுலோக விளக்கத்தில் குறிக்கப் பட்ட இருக்குவேத மந்திரம்.

அங. அரசனைக் கண்டவழி, குடிகட்கு அச்சநிகழ் தல் இயற்கை யென்பது 'தஸ்மாத்ராஜமுகம் பீஷ்மம் பாவு கம்' எனவரும் தைத்திரியப் பிராமணத்தா லறிக. திருவு ருத்திரத்துள் 'நம: ஸோமாயச' என்னும் அநுவாகத்தில் 'பீமாயச' என வருதல் காண்க.

அச. 'அஞ்சத்தக்க வச்சிரமென்பது' கடோப நிஷ தத்து வரும் 'யதிதம் கிஞ்ச ஜகத்ஸர்வம் ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம் | மஹத்பயம் வஜ்ர முத்வயதம் யஎதத் விதுரம் ருதாஸதே பவந்தி' என்பது. (கடோப. சு. உ.)

சிவபிரான் மாட்டுள்ள அச்ச காரணத்தால் வாயு முதலி யோர் தந்தம் தொழில்களை வகித்துய்க்கின்ருரென்பது 'பயாதஸ்யாக் நிஸ்தபதி' என்று தொடங்கிவரும் கடோப

அ௫ "சிவபிரானுக்குக் கோரத்திருமேனி சிவத் திருமேனியென இரண்டுண்டு" என்று வேதங் கூறுகின்றது. அவற்றுள், முன்னையது தம்மை வழிபடுமன்பர்களுடைய ஸம்ஸாரரோக நீங்கச் சிகிற்சை செய்வது; பின்னையது அருணோக்கால் அவர்க்குப் பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்து வாபிவியத்தியை விளைப்பது. சத்திரமிட்டறுத் தன் முதலிய கொடுந்தொழில்கள் வைத்தியன் மாட்டுளவேனும், வியாதியாளர் அவனையே
அசு சரண்டடைகுவர். அதுபோல ஸம்ஸார ரோகத்தினால் வருந்து முயிர்கள் அதனிவிர்த்திப் பொருட்டுச் சிவபிரானது கோரத் திருமேனியை வணங்கித், திருஉருத்திர மந்திரங்களாற் சாந்தி வேண்டுப. சிவத்துவாபிவியத்திப் பொருட்டுச் சிவத்திருமேனியைச் சமகமந்திரங்களால் உவப்பிப்ப. இவ்விரண்டு மந்திரங்களுஞ் சிவபிரானது ஓமத்தின் பொருட்டும் பிரயோகிக்கப்படும்.

நிஷத மந்திரத்தாலும் (கடோப. சு. ௩.), 'பீஷா அஸ்மாத் வாத: பவதே' என்று தொடங்கி வரும் தைத்திரீய உபநிடத மந்திரத்தாலும் (தைத்திரீய. பிரமானந்தவல்லி. அ) அறியப் படும்.

அ௫. திருவுருத்திரத்துவரும் 'யாதே ருத்ர சிவாதநூர கோராபாபகாசிநீ' என்னும் மந்திரத்தால் அவ்விரண்டு திரு மேனிகளதுண்மை யறியப்படும்.

அஎ. சமக மந்திரங்கள் அரி முதலியோரை அன்னாதி களுடன் சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறுதலை

இச் சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் ௮௭
முதலியோரை அன்னாதிகளுடன் சேர்த்து, ஈயப்
படும் பொருள்களாகக்கூறுகின்றன. சிவபிரான்
அவற்றை ஈயுந்தாதாவாகலின், அவரை அங்
ஙனம் கூறிற்றில.

பெரியோர் சந்நிதானத்திற் சிறியோரை ஒப் ௮௮
பச்சம்மானியாமை உலகிற் கண்டாமன்றே; அது
போலச் சிவபிரானது சந்நிதானத்திற் றேவரை
ஒப்பச் சம்மானித்தன் முறையன்மை நோக்கி,
யாகத்தின்கட் சிவபிரானைக் குறித்துச் செய்யுங்
கிரியாந்தத்திற் பரிசேசனஞ்செய்து, வேறுபாடு
தோற்றுவிப்ப. இஃதறியமாட்டாது, அஃதிழிபு
பற்றிய செயலென்று கூறு மறிவிலா ரென்கடவ
ரென்க.

ஆன்மாக்களெல்லாம் பரதந்திரமுடைமையாற் ௮௯
பசுக்களெனப்படும். சிவபிரான் சுதந்திரமுடை
மையால் அப்பசுக்களுக்குப் பதியெனப்படுவர்.
சுவேதாச்சுவதரோபநிடத முதலியன ஆன்மாக்
களுக்கு அநீசத்துவமுஞ், சிவபிரானுக்கு ஈசத்

'வாஜச்சமே' என்று தொடங்கி 'அக்நிச்சம இந்த்ரச்
சமே' எனக் கூறி வருமிடையில் 'தாதாசம இந்தரச்சமே
விஷ்ணுச்சம இந்த்ரச்சமே' என வருதலானறிக.

௮௯. ஆன்மாக்களுக்கு அநீசத்துவமுஞ் சிவபிரானுக்கு
ஈசத்துவமுங் கூறுஞ் சுவேதாச்சுவதர சுருதியாவது:--
'ஜ்ஞாஜ்ஞௌ த்வாஜாவீசாநீசாவஜாஹ்யேகா போக்த்ரு
போகார்தயுக்தா' என்பது (சுவேதா. ௧. ௯.)

துவமுங் கூறும். இனி அவற்றிற்கும், அவருக்கும், அவ்விருதன்மையும் இபற்கையேயென்க.

கூ0 அற்றேல், "சிவபிரான் பசுபதித்துவத்தைத் தேவர்கட் பெற்றனர்" என்று வேதங் கூறியது மாறும் பிறவெனின்;—அற்றன்று. இயல்பாக வதனையுடைய சிவபிரான் வேண்டிப் பெற்றுரென்றன் முழு விரோதமாகலின், அஃதருத்த

கூக வாதமென்க. அல்லதூஉம், அதனை வாய்மையெனக் கொள்ளின், தக்கன்வேள்வி சிதைத்தன் முதலிய அற்புதச் செயல்களைக் கூறும் வேத வாக்கியங்கள் போலியாய் முடியும். அதனுனும், அஃதருத்தவாதமே யென்பது.

கூஉ "சிவபிரானுக்கு அழிவில்லாத அனேக திருமேனிகளுண்டு" என்று இருக்குவேதங் கூறுகின்றது. "சிவபிரானை வழிபடு மடியார்கள்

கூ0. முப்புரமெரித்த அற்புதச்செயல் கூறுமிடத்து யசுர்வேதங் கூறுமாறு:—'ஸோऽப்ரவீத் வரம் வ்ருண அஹமேவ பசூனா மதிபதி ரஸாநி' என்பது. (யசுர்வே சு. உ) இதன்பொருள் 'நானே பசுக்களுக்கெல்லாம் அதிபதியாகுக என்று வரத்தை வரிப்பேனென அவன் கூறினன்' என்பது. இஃதருத்தவாத மென்பதை அப்பதீக்கிதர் பல பிரமாணங்கள் காட்டிப் பிரமதருச்சுத்தவத்தில் (சுலோகம் உஅ முதல் ௩ச வரை) நிருபித்தனர்.

கூஉ. 'ஸ்திரேபிரங்கை: புருரூப உக்ர:' என்பது பரமசிவனுக்கு அழிவில்லாத அநேக திருமேனிகளுண்டென்று கூறும் மந்திரம். (இருக்குவே உ. ௩௩. கூ.)

அன்னத்தைப் புசிப்பர்'' என்று அதுவே கூறுகின்றது. அஃதங்ஙனங் கூறுமுகத்தானே, ௬௩ "நாடோறும் உணற்குமுன்னர்ச் சிவபூசைசெயற்பாற்று'' என்னும் விதிக்கு மூலமாதலறிக.

சிவபுத்திரர்களாகிய மருத்துக்களைப் "பரத ௬௪ சூனுக்கள்'' என்று வேதங்கூறியது அவருக்குத் திருநடனத்தொழி லுண்மைபற்றி யென்க. பாரத்தை வகித்தல்பற்றிப் பரதனெனப்படுகின்றாரெனின்;—விசேடமாகிய திருநடனத் தொழில்

'சிவபிரானை வழிபடு மடியார்கள் அன்னத்தைப் புசிப்பர்' என்று கூறும் மந்திரம்:-'அந்தரிச்சந்தி தம் ஜநே ருத்ரம் பரோ மநீஷயா க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா 'ஸஸம்' என்பது. இருக்குவே (அ. சுக. ௩.) இதன் உபப்பிருங்கணம் பராசரபுராணத்து வருதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனாரும் இக்கருத்தையுட்கொண்டு 'உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்' எனவும் 'அருப்போடு மலர்பறிதிட் டுண்ணு வூரும்' எனவும் தனித் திருத்தாண்டகத்தில் அருளிச் செய்தனரென்க.

௬௩. நாடோறும் உணற்குமுன்னர்ச் சிவபூசை செய்யற்பாற்று' என்னும் விதியாவது சிவதரும சூத்தத்தில் 'வரம் ப்ராணபரித்யாக: சேதநம் சிரஸோ அபிவா | நத்வநப்யர்ச்ய புஞ்சியாத் பகவந்தம் த்ரிலோசநம்|| 'என வருவது.

௬௪. மருத்துக்களைப் பரதசூனுக்களென்று கூறும் மந்திரமாவது:-'' ஆஸத்யா பர்ஹிர் பரதஸ்ய ஸூநவ: என்பது. (இருக்குவே உ. ௩ சு. உ.)

சூனு—மகன்.

அவர்க்குளதாயிருக்க, அதுபற்றிக் கூறுது, அங்ஙனங் கூறுத லெற்றிற்கென்று கடாவி மறுக்க.

கூறு இருக்கு வேதத்திற் சிவபிரானை "வீரன்" என்
கூகூ றது காமன், இயமன், திரிபுரத்தர், தக்கன் முத லியோரைப் பங்கப்படுத்தினமை பற்றியென்க.

கூஎ ஆயிரஞ் சாகையுடைய சாமவேதத்தில் "ஆன்மாக்க ளெல்லாவற்றிற்கும் அதிபதி சிவ பிரான்" என அவர் மகிமை கூறப்பட்டது. அதனகத்துள்ள தேவவிரத முதலிய மந்திரங் களிற் சிவகணநாதர் மகிமை கூறப்பட்டது.

கூஅ குணங்களெல்லாவற்றானும் பிதாவாகிய சிவ பிரானேடு சமத்துவமுடைய விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுளென்னுந் திருக்குமாரரிரு வருஞ் சாமவேதத்தாற் றுதிக்கப்படுகின்றனர்.

கூகூ. சிவபிரானை வீரனென்று கூறும் மந்திரமாவது :- 'அபிநோவீரோ அர்வதி க்ஷமேத ப்ரஜாயேமஹி ருத்ரப்ர ஜாபி' என்பது. (இருக்குவே உ. ௩௩. க.)

கூஎ. சிவபெருமான் ஆன்மாக்களுக்கெல்லாம் அதிபதி யென்னும் சாமவேத மந்திரமாவது :-' அதிபாதாயி மித்ரா பாதாயி க்ஷத்ராபாதாயி ஸுவ :' என்பது.

சிவகணநாதர் மகிமை கூறும் சாமவேத மந்திரமாவன:- 'யே தேவா திவிஷதஸ்த' என்பது முதலியன.

கூஅ. சாமவேதத்தில் 'ஜுஷாணஸ ஆத்மந' என்று தொடங்கும் வர்க்கத்தில் விநாயகப்பெருமானும், 'ஆமந்த்ரை

அதர்வசிகை "பிரமன்முதலிய பொருள்க ளெல்லாவற்றையுங் கைவிட்டுச், சிவத்துவத் தைச் செய்தருளுஞ் சிவபிரானே புருடர்களால் வீடுபேற்றின் பொருட்டுத் தியானிக்கற்பாலர், வீடுபேற்றிற் கேதுவாகும் வார்த்தையிதுவே பிறிதில்லை" என்று கூறிமுற்றிற்று. கக

யசுர்வேதமுடையார் சிவபிரானேடுடன் ஒருன்றுதல் பற்றி, அருட் சத்தியாராகிய சிவ பிராட்டியாரை அவர்க்குத் "தங்கை" என்று கூறுப. அதர்வண வேதமுடையார் "பிரமன் முதலியோரைநீக்கிச், சிவபிராட்டியாரோடு சிவ ௩

ரிந்த்ர ஹரிபிராநோ விச்வாஸாஹவ்யம்' என்று தொடங்கும் வர்க்கத்தில் சுப்பிரமணியக்கடவுளும் துதிக்கப்படுகின்றனர்.

கக. 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ் தேஸம் ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் ந காரணம்' என்று தொடங்கி 'சிவ ஏகோ த்யேயச் சிவம்கரஸ் ஸர்வமந் யத்பரித்யஜ்ய ஸமாப்தாதர்வசிகா' என வருவது அதர்வசி கோபநிடதம்.

௩. சிவபிராட்டியாரைச் சிவபிரானுக்குத் தங்கை யென்று கூறும் யசுர்வேத மந்திரமாவது :-'ஆகுஸ்தே ருத்ர பசுஸ்தம் ஜுஷஸ்வைஷ தே ருத்ரபாக: ஸஹ ஸ்வஸ் ராம்பிகயாதம் ஜுஷஸ்வ' என்பது. (யசுர்வே. க. அ.) மாணிக்கவாசக சுவாமிகளும் இக்கருத்தை 'எம்பெருமா னிமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன்றகப் பன்றமையன்' என்றருளிச் செய்தனர். (திருவாசகம்) திருப்பொற்சுண்ணம் கங.)

பிரான் றியானிக்கற்பாலர்" என்று கூறுப.
௱க வேதங்களெல்லாம் "ஏகனுகிய சிவபிரானே பதிப்பொருள்" என்று கூறினும், யசுர்வேத முடையார் அவரை அவர்தாதான்மிய சத்தியாரோடு இருபொருளாக விவகரிப்ப. அச்சிவ பிராட்டியாருடைய வாக்குமனத்துக் கதீதமான பிரபாவ மனைத்தையும் புகலப் பிரமனும் வல்லுநனல்லன்.

௱உ ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்ணும், நான்கு திருத்தோளும், வெண்ணிறமும் பொருந்திய சிவபிரானுடைய அழிவில்லாத் திருமேனி ஒன்றேனும், உபாசிப்பவர் உபா

'பிரமன் முதலியோரை நீக்கி' என்பதனை முன் ககவது சுலோக விளக்கத்திற் காட்டப்பட்ட அதர்வசிரோபநிடத மந்திரத்தாலும், 'சிவபிராட்டியாரோடு சிவபிரான் றியானிக்கற்பாலர்' என்பதனை 'அத கஸ்மாதுச்யதே ஈசாந:' என்று தொடங்கி 'யஸ்ஸர்வாந் லோகா நீசத ஈசாநீபி: ஜநநீபி: பரமசக்திபி:' என்பனவாக வரும் அதர்வசிரோபநிடத மந்திரத்தாலும் அறிக.

௱க. 'ஏகனுகிய சிவபிரானே பதிப்பொருள்' என்பதனை 'ஏக ஏவ ருத்ரோ நத்விதியாயதஸ்தே' எனவும் 'ய ஏகோ ருத்ர உச்யதே' எனவும் வரும் மந்திரங்களாலறிக. எனினும் சத்தியாரோடு இருபொருளாக வியவகரிக்கப்படுவதை 'ஸஹஸ்வஸ்ராம்பிகயா' எனவும் 'அம்பிகாபதய உமாபதயே' எனவும் 'பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே' எனவும் வரும் சுருதிகளாலறிக.

சனை வேறுபாடுபெற்றிப் பலவாய் விளங்கும். "கிராத வடிவரும் பினுகத்னதத் தரித்தவரும், ௱௩ தோலுடையருமாகிய சிவபிரானை, அவருடைய தருமபத்தினியாராகிய சிவபிராட்டியாரோடு பர்வகாலத்திற் செயப்படுஞ் சாகமேத மென்னுங் கிரியையிற் புண்ணிய அவிசுகளால் அநந்நிய பாவனையை யுடைய பத்தர் திரியம்பக மந் திரத்தாற் பூசிக்க" என்று கற்பசூத்திரத் திற் கூறப்பட்டது. "நல்லோர் சகத்தினுற் ௱௪ பத்தியின் பொருட்டு வீரிய மழையைப் பெய்வதூஉம், அணித்தாகிய மருங்கிற் பத் தினியாராகிய சிவபிராட்டியாரையும் நடுவிற் சுப்பிரமணியக் கடவுளையு முடையதூஉம், சாராமரணரகித மானதூஉமாகிய விக்கிரகத்தை யுடைய சிவபிரானையும், அவருடைய துவார பாலகர்களையும், அவர் பத்தினியாரையும், தேவ

௱௩. 'ப்ரதி பூருஷமேககபாலம் நிர்வபதியாவந்தோ' என்று தொடங்கி 'பிநாகஹஸ்த: க்ருத்திவாஸா:' என்பன வாக வரும் மந்திரங்களைக் கற்பசூத்திரத்துக் காண்க.

௱௪. **யசுர்வேதத்**தில் ஈசானபலி கூறுமிடத்து 'உபஸ்ப்ருசத மீடுஷே மீடுஷ்யை ஸ்வாஹா ஜயந்தோபஸ் ப்ருச ஜயந்தாய ஸ்வாஹா பவாய தேவாயஸ்வாஹா' என்பன வாகக்கூறி 'தேவஸேநா உபஸ்ப்ருசத தேவசேநாப்ய ஸ்வாஹா த்வாராதிபோபஸ்ப்ருச த்வாராதிபாய ஸ்வாஹா த்வாரப்யு பஸ்ப்ருச த்வாரப்யை ஸ்வாஹா நிஷங்கிந்நு பஸ்ப்ருச நிஷங்கிணே ஸ்வாஹா நமோ நிஷங்கிண இஷுதி மதே க்ஷேத்ரஸ்ய பதிநா வயம்' என வருதல்காண்க.

சேஞயாரோடு தேவசேனரையும், கேத்திர பாலரையும் பூசிக்கின்றனர்" என்று யசுர்வே
௱ரு தத்திற் கூறப்பட்டது. "விரூபாக்கராகிய சிவ பிரானைச் சிவபிராட்டியாரோடும், திருக்குமாரர் களிருவரோடும், கணங்களோடும், பாரிடரோ டும், அட்டமிப் பிரதோடத்திற் பூசிப்பவர், தம்பாவத்தி னீங்கி, மிருத்துவையுங் கடப்பர்" என்று போதாயனத்திற் கூறப்பட்டது.

௱சு தேவர்களுடைய மந்திரங்கள் சில; அவை அவர்களுடைய வரையறைப்பட்ட பிரபாவங்களை யே கூறும். சிவபிரானுடைய திருநாமங்களையும் திருமேனிகளையும் குணங்களையும் வருணிக்கு
௱எ மந்திரங்கள் வரையிறந்தன. திருவுருத்திரத் திற் கூறப்பட்ட சிவபிரானுடைய திருநாமங் களும், திருமேனிகளும், குணங்களும் அன்ன.

௱அ இனி வேதநூல் சுயம்புவாஞலு மாகுக; சிவ பிரானல் அருளிச் செய்யப்பட்டதாஞலுமாகுக; வேதவாக்கிய முழுதும் பிரமாணமே. வேதத் தின் வேருய நூல்கள், அதனேடு விரோதியாத வழி, ஆக்கியோர் தாரதம்மியத்துக் கேற்பப் பிர மாணமாம். வேதம்போற் றிவ்விய சிவாகமமும்

௱ரு. போதாயனர் 'தேவஸ்யாயநே ப்ரதிதிசம் ப்ரத்யோதயதி' என்பனவாகக் கூறுதல் காண்க.

௱அ. வேதம் சுயம்பு என்பார் மீமாஞ்சகர். ஈசுரப் பிரணீதமென்பார் தார்க்கிகர்.

பிரமாணமாம். அச்சிவாகமம், சிவத்தியானத் ௱௯
துக்கு உபயோகமாயுள்ள பதிபசுபாச மூன்றனை
யும் விளக்குவதாய்ச், சிவபிரானுக்குத் திருமுக
முதற் றிருவடியீறுயுள்ள அங்கங்களாயிருக்
கும். யாகவிதி கற்பசூத்திரத்தாற் பெறப்படு ௱௰
தல் போலத் தியாதாவும், தியானமும், தியேய
முமாகிய மூன்றுஞ் சிவாகமத்தாற் பெறப்படும்.
கிருகியசூத்திரத்தில் உபநயன விதியிற் கூறப் ௱௰௧
பட்ட "அத்துவநாம்" என்னு மந்திரம் அத்து
வாவையும், அத்துவபதியையும், அத்துவாக்
களின் றாதம்மியத்தையும், சிரேட்டாத்துவா
வெனப்படு மந்திராத்துவாவின் முடிபாயுள்ள
சிவத்தையுங் கூறுதலின், சிவாகமத்திற் கூறப்
படும் அத்துவாக்கள் வேதத்தினுங்காண்க.
இருடிகளாற் செய்யப்பட்ட கற்பசூத்திர முதலி ௱௰௨
யன பிரமாணமாகுமாயின், பெரிய விருடியாகிய
சிவபிரா னருளிச்செய்த சிவாகமம் பிரமாணமா
மெனக்கூறல் வேண்டுமோ வென்க. தவ வலியா ௱௰௩

௱௮—௱௰௧. இங்கே கூறப்பட்டதைச் சிவஞான பாடி
யத்துச் சைவாகமப் பிராமாணியங் கூறுமிடத்து அருளிச்
செய்தது கொண்டுதெளிக.

௱௰௧. அத்துவநாம் என்னும் மந்திரமாவது :—'அத்வ
நாமத்வபதே ச்ரேஷ்டஸ்யாத்வந: பாரமசிய' எனவருவது.

௱௰௨. சிவபெருமான் பெரியவிருடி யென்றலை 'விச்
வாதிகோ ருத்ரோ மகர்ஷி' என்னுஞ் சுருதியாலறிக.
(சுவேதா. ௩. ௪., ௪. ௧௨)

ஞன் வேத சமூகத்தினின் ஒவ்வோர் மந்திரத்
தை யுணரப்பெற்றானை யன்றோ இருடி என்பவா
கலின், இயல்பர்கவே அம்மந்திரங்க ளனைத்தை
யும் உணராநிற்குஞ் சிவபிரானைப் பெரிய விருடி
௱௰௪ யென்றற் காசங்கை என்னு மின்றென்க. சாங்கி
யர் பாச பசு பதி யென்னு மூன்றனையு முறையே
பிரதானம் புருடன் ஈசனெனப் பெயரிட்டு
வழங்குப. அது சிவாகமத்திற்கு முடன்பா
டேயென்க.

௱௰௫ கிருகியசூத்திரகாரர் சிவபூசை கூறினாரில்லை
யாலோவெனின்;—வேதத்திற் பெறப்பட்டும்
புராணங்களிற் பிரசித்தமாயும் போதாயன
முனிவரால் விஸ்தரிக்கப்பட்டு மிருத்தலின்,
அதனை முற்று முணர்ந்த கிருகியசூத்திரகாரர்
கூறுதொழிந்தார். அதுமட்டோ, அவர் முக்கி
யமாகிய யஞ்ஞோப வீதத்தையுங் கூறுதொழிந்
௱௰௬ தார். கூறுததுகொண்டு சிவபூசைக்குக் குறை
வென்னை? வேதங்களுக்கு உபபிருங்கணங்களா
கிய புராணங்களிற் சிவபூசை ஆண்டாண்டு
முழங்கப் படுகின்றது. அவ்வுபபிருங்கண வாயி

௱௰௫. சிவபூசை வேதத்திற் பெறப்படுதலை 'தமுஷ்டு
ஹி ய: ஸ்விஷ்டீ:' (இருக்குவே. ௫. ௪௨. ௧௧.) 'ஆவோ
ராஜாநம்' (இருக்குவே. ௪. ௩. ௧.) 'அந்த ரிச்சந்தி,
(இருக்குவே. ௮. ௭௧. ௩.) என்பன வாதியாகவரும் மந்திரங்
களாலறிக.

லால் வேதத்தை மூலமாகவுடைய மிருதிகள் கூறுமைபற்றிச் சிவபூசை குறையுறுதென்க. அல்லதூஉம், வேதப்பொருளை நிச்சயித்தற்குப் ௱௫ புராணம் அங்கமாம். அப்புராணங்களா னிச் சயிக்கப்பட்ட வேதப்பொருளே மிருதிகளாம். ஆகவே, வேதம் போலப் புராணவசனம் பல முடையன; அவற்றின்முன் மிருதிகள் வலியு டையவாகா. அல்லதூஉம், அநுபலத்திக்கு ௱௭ விடயமாகுஞ் சுருதியை மூலமாகவுடைமை யினும் அவை பிரபல பிரமாணமாகா. ஆகவே, பிரத்தியக்க வேதத்தினன் விதிக்கப் பட்ட யாகம் மிருதியின் பார்வையை வேண்டா தவாறு போலச் சிவபூசையும் அவற்றின் பார் வையை வேண்டாதென்க.

இனிப் "பூர்வான்னத்திற் செயற்பாலனவா ௱௯கூ கிய நியமங்களை முற்றி, நியதசித்தனுய்த் தேவ பூசையைச்செய்க" என்று மநுவாற் கூறப்பட்ட மையானும், சிவபிரான் றேவருள் வைத்து மகா தேவரெனப் படுதலானும், மிருதியினுஞ் சிவ பூசை கூறப்பட்டதென்றே கோடும். அற்றேல், சிவபிரானுக்கு மகாதேவப் பெயருண்மைக்கு௱உக

௱௯கூ. மனுவாக்கியமாவது :—'குர்யாந்நியத சித்தஸ்து பூர்வாஹ்நே தேவதார்சநம்' என்பது.

௱உக. அதர்வசிரமந்திரமாவது :—'அத கஸ்மாதுச் யதே மஹாதேவோ யஸ்ஸர்வாந் பாவாந் பரித்யஜ்யாத்ம

பிரமாண மென்னையெனின்;—அதர்வசிரசே பிர
௱௨௧மாணமென்க. அன்றியும், போதாயன சூத்தி
ரத்திற் சிவபிராட்டியாரோடும் இடபதேவரோ
டுஞ் சிவபிரானுக்கு ஈசானபலி கூறிப் பூசை
௱௨௨விதித்ததூஉங்காண்க. புத்திப்பொருட்டுச் செய
ப்படுவதூஉம் முத்திப் பொருட்டுச் செயப்படுவ
தூஉமெனச் சிவபூசை இருவகைப்படும். வேள்
வியும் அங்ஙனம் இருவகைப்படும்.

௱௨௩ சிவபிரான்றேவருட் பிராமணராகலின், அவர்
க்கு நிவேதித்ததனைப் புசிக்கலாகாதென முனி
வர் விலக்குப. அற்றாகலினன்றே "பிராமணருச்

ஞாநயோகைச்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாதுச்யதே மஹாதேவ :' என்பது. வடநாட்டுப் பிரதிகளில் பகவான் மகேசுரனென்னு மிருபெயர்களுக்குங் காரணங்கூறும் மந்திரங்களும் இம் மந்திரப்பகுதியும் விரவிக் காணப்படுகின்றன.

௱௨௧. இஃது ஆபஸ்தம்பராலுங் கூறப்பட்டது.

௱௨௨. இதனைச் சிவஞானபாடியத்து எட்டாஞ் சூத்திர வுரையிற் கண்டு தெளிக.

௱௨௩, ௱௨௪. சிவபெருமான் தேவருட் பிராமணரென்பதற்குப் பிரமாணமாகிய **சாமவேதத்துப் பிரபத மந்திர** மாவது :—' தபச்சதேஜச்ச ' என்று தொடங்கிவருமிடையில் ' த்வம் தேவேஷு ப்ராஹ்மணோ அஸி அஹம்மநுஷ்யேஷு ப்ராஹ்மணோவை ப்ராஹ்மணமுபதாவத்யுபத்வா தாவாமி ' யென்பது. **சிவஞான சுவாமிகள்** இம் மந்திரப் பொருளைப் 'பிராமணனீயே கடவுளர் தம்முட் பிஞ்ஞகா

சிட்ட மனைத்தையு நிலத்திற் புதைக்க அல்லது சலத்திலெறிக" என்று கற்பசூத்திரத்திற் கூறியதூஉமென வுணர்க. பிராமணர்க்குப் பிராமணாஉசராகிய சிவபிரானையே வழிபடுதல் தகுதியாம். ஏனைக் கீழ்வருணத்தராகிய தேவரை வழிபடுதல் பிராமணர்க்குத் தகுதியன்று. அற்றேல், சிவபிரான் றேவருட்பிராமணர் என்றற்குப்பிரமாணமென்னையெனின்;—சாமவேதத்திலுள்ள பிரபத மந்திரமே பிரமாணமென்க.

முனிவர் உயர்புடையதனையும் இழிபுடையாஉடுதனையும் ஒப்பவிலக்குப: தீக்கிதவன்னத்தையும் பதிதவன்னத்தையும் விலக்கினமையானும், "சண்டாளன், சண்டிலன், மசான பாலகன்,ரூஉசு

வேனையோர் தம்முட், பிராமணன் யானே பிராமணன் றனக்குப் பிராமணன் கதியுனை யிகழ்வோன், பிராமணனல்லன் றன்குல தெய்வம் விண்டுபின்னென்றனைத் தொழுமப், பிராமணர்க்கிரண்டும் பயப்படா நிரயம் புகுவனென்றுயர் மறைபேசும்' என்றருளிச் செய்தனர். (காஞ்சிப்புராணம் காயாரோகணப்படலம். க.)

'பிராமணருச்சிட்ட மனைத்தையும் நிலத்திற் புதைக்க அல்லது சலத்திலெறிக' என்னும் கற்பசூத்திர விதியாவது:—'ப்ராஹ்மணஸ்வகீய முச்சிஷ்ட மப்ஸுவா நிக்ஷிபேத் பூமௌவா நிகநேத்' என்பது.

ரூஉடு - ரூஉஅ. முனிவர் என்றது ஹாரீதரை. அவர் பதித அன்னத்தை விலக்குதல் 'யதந்நம் ப்ரதிலோமஸ்ய' என்பனவாகக் கூறுதலானும் தீக்கிதஅன்னத்தை விலக்குதல்

கள்விற்போன், பசு, பிராமணன், அக்கினி, தீக்கையுடையான், பெண்களென்னு மிவரைப்
ாஉஎ பரிசிக்கற்க" என்றமையானும், அக்கினிபோலுந் தீக்கிதவன்னத்தை விலக்கியவர்தாமே, "இராசபரிக்கிக மென்னுங் கிரியை செய்த பின்னர் அதனைப் புசிக்க" என்றமையானும், "சங்கத்தின் அத்திபாவனம்" என்றும் "மநுட அத்தி அபாவனம்" என்றுங் கூறினமையானும், அதற்
ாஉஅ குக் காரணங் கூறப்படாதென்க. சிவபிரானையொழித்தொழிந்த தேவர்களுக்கு நிவேதிக்கப்படு மன்னம் அப்பிராமணருடைய பசிநிவிர்த்திப் பொருட்டுபயோகப்படுக.

வைசுவதேவமென்னுங் கிரியையில் அத்தேவர் சேடத்தால் அக்கினி முதலிய தேவர்க்குப்
ாஉகூ பலியிடலாகாது: அற்றேல், தேவர்களுக்கு நிவேதியாத அன்னத்தால் வைசுவதேவ பலியிட்டு, அவர்க்கு நிவேதித்த அன்னத்தைப் புசிக்கலாமெனக் கொள்ளாமோ வெனின்;—கொள்

வர்ஜ்யாந்நோ தீக்ஷிதோ விப்ரைர் யாவத்ராஜ பரிக்ரியா' என்று கூறுதலானும் அறியப்படும்.

'இராஜ பரிக்கிரக மென்னுங்கிரியை செய்த பின்னர் அதனைப்புசிக்க' என்றமை 'க்ருதராஜபரிக்ரியோ போஜ்யாந்ந:' என்னுஞ் சுருதியான்றிக.

'சங்கத்தின் அத்திபாவநம்' 'மநுட அத்தி அபாவநம்' என்பதனை 'நாரம் ஸ்ப்ருஷ்ட் வாஸ்திஸஹஸா ஸவாஸா ஜலமாவிசேத்' என்னும் மிருதி வசனத்தாலறிக.

ளாம். என்னே? "அசனத்துக்குரிய அன்னக் கூற்றினுற்றுனே பலியிட்டுண்க" என விதிக்கப் பட்டமையின்.

முன்னொருகாலத்திற் "சிவபிரான் பிரமக்கொ௱௧௨லைக்காகப் பலியேற்றனர்" என்பதை உணரப் றுவார்க்கு, அது திருவிளையாடல் மாத்திரையே யென்பது இனிதுவிளங்கும். சிவபிரான் பிரமன் றலையைப் பறித்தமையானன்றே அவன் றீர்க்காயு ளுடையனுய்ச் சீவிக்கின்றுனென்க. அது திரு௱௧௧ விளையாட்டன்று, பிராயச்சித்தமெனின்;—நாபி முதற் சாநு பரியந்தஞ் சாணவத்திரந் தரித்தல், கையிற்கபாலதுண்டந்தரித்தல், கொடி தண்டம் பிணத்தலை தரித்தல், ஏழுவீட்டிற் பலியேற்ற லென விதிக்கப்பட்ட பிராயச்சித்தாநுட்டானம், அவர்கட்காணப்படாமையான், அது பொருந்தா தெனமறுக்க. அல்லதூஉம், காலபைரவர்௱௧௨ செய்த பிரமகத்திக்குச் சிவபிரான்பிராயச்சித்தஞ் செய்துகோடல் செல்லாதென்க. செல்லுமேல், கற்பங்கடோறும் அவர்செய்யும் பிரமகத்தி

௱௧௧. மிருதியிற் கூறப்பட்ட பிராயச்சித்தவிதியாவது:— 'ப்ரஹ்மக்னோ வஸநம் சாணம் கபால சகலம்கரே | கேது யஷ்டௌ சவசிரோ பைக்ஷம் ஸாப்தே நிகேதநம்' என்பது.

௱௧௨. சிவபிரானது சங்காரத்தொழிற் சிறப்பு 'ஹரிம் ஹரந்த மநுயந்தி தேவா: விச்வஸ்யேசாநம் வ்ருஷபம் மதீநாம்' எனச் சுருதியிற் கூறப்பட்டது.

விண்டுகத்தி முதலியவற்றிற்குஞ் சிவபிரான் பிராயச்சித்தஞ் செய்து கோடல் வேண்டும்; அவ்வாறு செல்லாமையின், அது திருவிளையாடல் மாத்திரையே யென்பது.

௱௩௩ பரமேசராகிய சிவபிரான் றேவர்கட் பசுபதித்துவம் பெற்றுக்கொண்டருளியதனையும், அவர் பயிக்கம் புகுந்தருளியதனையும், அறிந்துரைக்கப் பிருகஸ்பதியும் வல்லானென்க.

௱௩௪ இனிச் சிவபிரான் "பிரமன் விண்டுவாயினர்" என்றும் "பிறவெல்லாமாயினர்" என்றும், அறிவிலார் அபேதபாவனை பேணுதற்கேது, பிறிதோராற்றாற் பெறப்படாமையின். அத்தேவரடைந்த இழிவை மறைத்தலொன்றோ மோகம் அடைதலொன்றோ இரண்டனுளொன்று திட்பமுடைத்தாதல் வேண்டுமென்க.

௱௩௫ அற்றேலஃதாக; வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப்பொருளாகிய சிவபிரானுக்கும் உயிர்களுக்கும் அத்துவிதங்கூறியதென்னை யெனின்;— கருடனு மாந்திரிகனும் தம்முள் வேறுதல்

௱௩௫. இந்தச் சுலோகத்தின் மூன்றும் பாதத்தில் 'அளீகம்' என வருதலைச் சிவஞான சுவாமிகள் தாம் அருளிச்செய்த சிவசமவாதவுரைமறுப்பில் 'ஒன்றெனு மதனல்' என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்திற்கு ஞானப்பிரகாசர் கூறியவுரை பொருந்தாதென நிரூபிக்கு

வெளிப்படையாயினும், கருடோகம் பாவனை விடத்தை நீக்கன்மாத்திரைக்கே வேண்டப் படும். அது போலச் சிவன் சீவன் என்னும் பதார்த்தங்க ளிரண்டும் தம்முள் வேற்றுமை யுடையன வென்பது தேற்ற மாயினும், உயிர் களுக்கு மலநீக்கத்தின் பொருட்டு வேதத்தி லத்துவித சிவோகம் பாவனை கூறப்பட்டது. இங்ஙனமாகலின், அதுகொண்டுதானே நிருப சரிதைக்கியங் கூறுதல் சாலாதென்க.

சிவபிரான் பிரமனுடைய ஐந்தாஞ் சிரசைக்௱௬ கிள்ளினரென்றும், பிரமனரியிருவரும் அவரு டைய திருமுடியினையுந் திருவடியினையுந் தேடி யுழன்றனரென்றும், யாம் முழங்குவேம். அது மூடபுத்தியுடையார் அழுக்கறுத்தற் கேதுவாக.

சோமக் கொடிக்கு விண்டுவின்மாட்டு உற்௱எ பத்தி கூறியது கௌணவிருத்திபற்றியாகலின், அது முக்கியவிருத்திபற்றிச் சிவபிரானையே

மிடத்து எடுத்தாண்டு 'அதுகொண்டுதானே நிருபசரிதைக் கியங் கூறுதல் கூடாதென்பதாம்' என்று அருளிச்செய் தனர்.

௱௬எ. சோமக்கொடிக்கு விண்டுவின்மாட்டு உற்பத்தி கூறிய சுருதியாவது:—'ஸோம: பவதே ஜநிதாமதீநாம் ஜநிதா திவோ ஜநிதா ப்ருதிவ்யோ ஜநிதாக்நேர் ஜநிதா ஸூர் யஸ்ய ஜநிதேந்த்ரஸ்யஜநிதோத விஷ்ணோ:' என்பது.

௱௩௮ யனையும். சிவபிரானும் விண்டுவும் ஒருவருக்
கொருவர் ஜனகராயின், வரம்பு கடந்து,
நாமுஞ் சிவபிரானாகுவம் சிவபிரானு நாமாவர்.
பொருள்களி னியல்பை மாற்றுதல் சிவபிரானு
௱௩௯ டைய ஆணைக்கும் இயலாதென்க. விண்டு
முதலிய தேவர்போற் பிறக்கக் கருதுதல் சிவ
பிரானுக்குஞ் செயற்கரிய தொன்றாகும். அது
அத்திரி பத்தினியால் வேண்டப்பட்டும் அவள்
கருவிற் புக்கு உதிக்கமாட்டாமையான் இனிது
௱௪௰ விளங்கும். விண்டு கருவிற்புக்குதித்தது சுவேச்
சை யெனின்;—கருப்பாசயத்திற் கட்டுண்டு
நெடுங்காலங் கிடக்க எவனுமிச்சியானாகலின்,
முற்பிறவியிலீட்டிய வினைக்கிடாகவே அவற்கு
௱௪௧ இச்சை நிகழ்ந்த தென்றொழிக. அற்றேல்,
பாரதமுதலியவற்றில் விண்டுவினுடைய அவ
தாரத்தைச் சுவேச்சையென்றதென்னை யெனின்;
அது குணவாதமென்க.

௱௪௨ சிலர் பிரமனையும் சிலர் விண்டுவையும்
சிலர் ஏனைத் தேவர்களையு முபாசிப்ப. அவ்
வுபாசனைகள் உலகத்திற்பயன் பயப்பனவன்றி
வீடுபேற்றினைப் பயக்காவாம். "ஒருவன் ஆகா
யத்தை ஆடையாக்கிக் கொள்ளுமாயின், சிவ

௱௪௨. சுவேதாச்சுவதரசுருதியாவது:—'யதா சர்ம
வதாகாசம் வேஷ்டயிஷ்யந்திமாநவா: | ததாசிவ மவிஜ்ஞாய
துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி||' என்பது. சிவபாத்துவத்திற்

பிரானை உபாசியாது, துக்கத்தினீங்கி, வீட்டினைத் தலைப்படும்.'' என்று சுவேதாச்சுவதரச் சுருதி கூறுதலின், வீடுபேற்றின் பொருட்டுச் சிவபிரானையே உபாசிக்க.
உடைந்தமரக்கலம் ௱௪௪
பிறிதொருமரக்கலத்தைக் கரையடைவிக்கமாட்டாது; அதுபோலப் பிறந்திறந்துழலுந் தேவர் அவ்வாறுழலுமெம்மனோர்க்குச் சரணாகமாட்டார். முயலிற்கோடும், ஆகாயத்திற்பூவும், ௱௪௩
கானலினீரும், மலடிமாட்டு மகப்பேறு முளவாயின், ஏனைத் தேவரை யுபாசித்தலான் வீடுபேறுந் தலைப்படுமென்க.

தேவருடைய பலபிறப்புக்களை நோக்கும்வழி ௱௪௫
நமக்குக் கழிபேரச்ச நிகழாநின்றது. ஆகலின், சிவபிரான் அப்பெற்றியவாம் பிறப்புக்களைத் திருவிளையாட்டுக்கேனும் மேற்கொள்ளாதொழிக. சிவபிரான்மாட்டு யாம் வேண்டிப் பெறும் பேறிதுவே. சிவபிரானை யொழித் ௱௪௬
தொழிந்த தேவரைத் துதிக்கும் அறிவிலார் என்கடவர்.

பொறாமைகொண்டோர் சிலர் இம்மந்திரத்துவரும் 'சிவ' என்னும் பதத்தைத் 'தேவ' என மாற்றியிருக்கின்றனர். அவர் இம் மந்திரத்திற்கு உபபிருங்கணம் 'ஸர்வோபநிஷதாம்ர்தச்சிவஏவ நசாபர: | ஏகமேவ ஹி தத்ஜ்ஞாநம் தத்ஜ்ஞாநஸ்ய நாசநம் ||' என **வாமநபுராணத்து** வருதலையறிந்திலர். அன்றியும் **கந்தபுராணத்துப்** 'பரசிவனுணர்ச்சியின்றிப் பல்லுயிர்த்தொகையுமீண்டே, விரிவிய துயர்க்கீறெய்தி வீடு

௱௪௭ சிவனடியார் திருக்கூட்டத்தையே விரும்பு
வேம். பிள்ளைமைப்பருவத்துஞ் சிவனடியார்
திருவடிப் பொடிகொண்டே மண்விளையாட்டுச்
௱௪௮ செய்யப்பெற்றோம். ஆண்டானாகிய சிவபிரா
னைத் துதிக்க அடியேமுக்கு வலியில்லையேனும்,
அவர் திருவருள்கொண்டே அவரைத்துதித்
தேம். அங்ஙனம் துதித்தேமுக்கு, அடியார்க்
கெளிவந்த கருணைவள்ளலாகிய சிவபிரான், உப
வீதம்போற் றரித்தருளிய புனித ஆடையினை
யும், திரிபுண்டரத்தினையுமுடையராய் வெளி
௱௪௯ நின்றருளித் தம்முடைய அநுசரரைக்கொண்டு
பாயசான்னத்தைக் கொடுப்பித்தருளினார். அத
னைப்பெற்றுண்டு, சொப்பன சமாதியோ என்று
கருதி யோகிகளைப்போலத் தெளிந்தேம்.

௱௫௰ இந்நூலைப் படித்து இதன்பொருளை உள்ளவா
றுணரப்பெறுவார்க்குக் கொள்ளற்பாலது பிறி
தொன்றில்லை; அறிதற்பாலதும் பிறிதொன்
றில்லை; எல்லாப்பேறும் இதனானேயுண்டாம்.

பேறடைதுமென்கை, யுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப்பதற்கொப்பென்றே, பெருமறை பேசிற்றென்னிற் பின்னுமோர் சான்றுமுண்டோ' என வருதலையும், காஞ்சிப்புராணத்து 'மாநடன் விசும்பைத்தோல்போற் சுருட்டுதல் வல்லோனாயி, னீனமில் சிவனைக்காணா திடும்பைதீர் வீடுமெய்து, மானமார் சுருதி கூறும் வழக்கிவை யாதலாலே,

இந்நூல் சிவபிரானுக்கோ ராரமாக. மக்காடுசு ளுக்கு வேத சிவாகமப்பற்றைவிளைக்க. பசுநூற் பற்றைக்கெடுக்க. சிவபிரான் றிருவடிப்பற்றை வளர்க்க.

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்

முற்றிற்று

யானம ரிறையைக் காணு முபாயமே யறிதல் வேண்டும்' என வருதலையும் அவர் அறிந்தாராயின் 'சிவ' என்பதே மந்திரத்துள்ளதென உணர்வர்.

உ

திருச்சிற்றம்பலம்

அருப்பொருள் விளக்கத்தில் எடுத்தாளப்பட்ட நூல்கள்

அதர்வசிகோபநிடதம்
அதர்வசிரோபநிடதம்
ஆதித்தியபுராணம்
ஆதித்தியோபநிடதம்
ஆபஸ்தம்ப சூத்திரம்
இருக்கு வேதம்
இலக்கணக்கொத்து
கடோபநிடதம்
கந்தபுராணம்
காஞ்சிப் புராணம்
கிருகிய சூத்திரம்
கைவல்லியோப நிடதம்
சாந்தோக்கியோப நிடதம்
சாம வேதம்
சாவித்திரியுபநிடதம்
சிவசமவாதவுரை மறுப்பு
சிவஞான பாடியம்
சிவதத்துவ விவேகம்
சிவதரும சூக்தம்
சுவேதாச்சுவதரோபநிடதம்
திருஞான சம்பந்தர் தேவாரம்
திருநாவுக் கரசர் தேவாரம்
திருவாசகம்
திருவாய்மொழி
திருவுருத்திரம்
தைத்திரீயப் பிராமணம்
தைத்திரீயோபநிடதம்
நாராயணோபநிடதம்
நீலகண்ட பாடியம்
பிரமதருக்கத்தவம்
போதாயன சூத்திரம்
மநுஸ் மிருதி
மூத்தொள்ளாயிரம்
மைத்திராயணோபநிடதம்
யசுர் வேதம்
வாமந புராணம்
வில்லிபுத்தூரார் பாரதம்

முதலியன.